விலை : ரு 3/50

# இந்து கலா சாரம்

இந்து சமய திங்கள் வெளியீடு

கௌரவ ஆசிரியர் : திரு. ஆர். வைத்தமாநிதி

மலர் : 2 ★ திருவள்ளுவர் ஆண்டு 2021 ஆவணித் திங்கள் 4ம் நாள் (20-8-1990) ★ இதழ் : 5.

## யாரிடம் நோவேன்? - யாருக்கு எடுத்துரைப்பேன்?

## ஆண்டவனே நின் அருள் இல்லையானால்!



துன்பமும், துயரமும், வேதனையும், சூழ்ந்த நிலையில், இறைவா, அன்பினில் விளைந்த ஆறமுதே, இம்மையே உன்னை சிக்கனப் பிடித்தேன். இங்கு வந்து எழுந்து அருளி யாவருக்கும் சாந்தியும் சமாதானமும், சந்தோஷமும் நிலைபெற்று மண்ணில் நல்ல வண்ணம் வாழ்வதற்கு அருள் புரியுமாறு சிரம் தாழ்த்தி, கரம் கூப்பி, கண்ணீர் மல்கி உன்தாழ் வணங்கி வேண்டுகின்றோம்.

இடரினும் தளரினும் உன்கழல் தொழுது எழுவோம்.

## சாந்தி சமாதானத்திற்காக பிரார்த்திப்போமாக!

# நமது நோக்கு

## மதங்கள் புனிதமானது !

மதங்கள் ஒவ்வொன்றும் புனிதமானது. அவை ஒவ்வொன்றினதும் கொள்கைகளும் கோட்பாடுகளும் உன்னதமானவைகள்.

முன்தோன்றிய மூத்தமதமான இந்துமதம் சமாதானம், சகோதரத்துவம், சௌஜன்யம், சமத்துவம் போன்ற அதியுயர் கொள்கைகளை மிகக்கூர்மையாக வலியுறுத்தி நிற்பதோடு மட்டுமல்லாமல், இவற்றால் விளையும் சாதகமானதும், பாதகமானதுமான செயல்களையும் மிகத்தெளிவாக விளக்கி விபரித்திருக்கின்றது.

அன்பின் மகத்துவங்கைப்பற்றி இதிகாசங்களும் புராணங்களும் எளியமுறையில் எழுதியிருப்பதனால் பாமர மக்களாலும் மிக இலகுவாக புரிந்துகொள்ளக்கூடியதாயிருக்கின்றது.

நாடு அபிவிருத்தியடையவும், தன்னிறைவு பெற்று சுபீட்சமடையவும் இவை கருப்பொருளாகத் திகழ்வதுடன், இனங்களுக்கிடையே ஐக்கியத்தையும் ஏற்படுத்த மூலப்பொருளாகத் திகழ்கின்றது.

உயிரினங்களுக்கு முக்கியத்துவத்தையும், உயர்ந்த அந்தஸ்தையும் கொடுத்து நிற்பதோடு, மனிதவுயிர்கள் ஒவ்வொன்றும் விலைமதிக்கமுடியாத பொக்கிஷங்களாக, உலகின் ஈடிணையற்ற அதியுயர்ந்த செல்வங்களாக தெட்டத்தெளிவாக எடுத்துக் காட்டப்பட்டுள்ளது.

உயிர்கள் அழிக்கப்படுவதை, அதிலும் மனித உயிர்கள் அழிக்கப்படுவதை எந்த மதமும் அநுமதிக்கப் போவதில்லை.

புனிதமான மத வழிபாட்டுத் தலங்கள் ஒவ்வொன்றும் பாதுகாக்கப்படல் வேண்டும். மத வழிபாட்டுத் தலங்களே மக்களை நல்வழிப்படுத்தும் தலைசிறந்த நிலையமாகும்.

கலாசாரத்தை கட்டிக்காக்க மதங்களே அத்திவாரமாகத் திகழ்கின்றது. ஆகவே மதக் கோட்பாடுகளை மீறாமல் மத அனுஸ்டானங்களைப் பின்பற்றி நடப்பதே பகுத்தறிவாளனின் பண்பான செயல்.

காலத்தால் ஏற்பட்ட இன்றைய கோலத்திற்கு, விதியின் வசத்தால் விபரீதமான விளைவுகளுக்குள்ளாகி - விரக்தியுற்றிருக்கும் எம்மக்களுக்கு இன்னல் நீங்கி இன்புற்று வாழ எல்லாம் வல்ல இறைவன் அருள்பாலித்து, அமைதியான வாழ்க்கை வாழவும் தீய எண்ணங்கள் நிறைந்த நெஞ்சங்களுக்கெல்லாம் தூய—பரிசுத்தமான எண்ணங்கள் நிறையப் பெறவும் ஆண்டவன் அருள்மழை பொலிய வேண்டும்.

## நற்சிந்தனை!

கங்கை நீர் சிறந்தது. அதனினும் சிறந்தது அபிஷேக நீர். அதனினும் உயர்ந்தது ஏழைகட்காக உழைக்கும் உத்தமனுடைய முகத்தில் துளிர்க்கும் வியர்வை நீர்.

— திருமுருக கிருபானந்த வாரியார்.

## விஷேட தினங்கள்

20-8.90 திங்கள் — அமாவாசை விரதம், நல்லூர் கந்தசாமி கோயில் தீர்த்தம் தொண்டமானாறு செல்வச் சந்நிதி கொடி.

21-8-90 செவ்வாய் — நல்லூர் கந்தசாமி பூங்காவனம், மட்டக்களப்பு சித்தாண்டி கந்தசாமி கொடி.

23-8-90 வியாழன் — மறைஞான சம்பந்தர் குருபூசை, தெல்லிப்பழை துர்க்காதேவி கொடி.

24-8-90 வெள்ளி — விநாயகர் சதுர்த்தி விரதம்.

26-8-90 ஞாயிறு — ஷஷ்டி விரதம்

30-8-90 வியாழன் — ஆவணி மூலம்

31-8-90 வெள்ளி — பரிவர்த்தன ஏகாதசி, பொன்னாலை வரதராஜப் பெருமாள் கொடி

02-9-90 ஞாயிறு — பிரதோஷ விரதம், ஆவணி ஏணம்.

03-9-90 திங்கள் — நடேசர் அபிஷேகம்

04-9-90 செவ்வாய் — பூரணை விரதம்.

10-9-90 திங்கள் — கார்த்திகை விரதம்

11-9-90 செவ்வாய் — ஸ்ரீ கிருஷ்ண ஜயந்தி

15-9-90 சனி — ஏகாதசி விரதம்

## வேண்டுகோள்!

நாட்டில் ஏற்பட்ட இக்கட்டான சூழ்நிலைகளினால் பல்வேறு மாவட்டங்களிலுமுள்ள அகதிகளுக்கு; உடமைகளிழந்து, இருக்க இடமுமின்றி பல்வேறு இன்னல்களுக்கு மத்தியில், விரக்தியின் விளிம்பில் தத்தளிக்கும் எமது சமுதாயத்துக்கு தங்களால் இயன்ற நன்கொடைகளை வழங்கி உதவ முன்வருவீர்களாக!

# இந்துமதம் ஒலிக்கிறது

பிறமதங்களைப் போல், 'இந்துக்களே ரக்ஷிக்கப் படுவர்; மற்றவர்கள் நரகத்துக்குச் செல்வார்கள்' என்று இந்து மதத்தில் எந்த சாஸ்திர நூலும் கூற வில்லை.

ஞானமார்க்கம் இந்து மதத்தில் மட்டும்தான் என் றும் எவ்விடத்திலும் சொல்லப்படவில்லை. ஸ்ரீ கிருஷ்ண பகவானே கீதையில், நம்பிக்கையுடன் மற்றதெய்வங்களை வழிபடுகிறவர்களும் என்னையே வந்தடைகிறார்கள்' என்கிறார். 'எந்த உருவத்தில் பரம்பொருளை உபாசிக்கிறீர்களோ அந்த உருவ மாய் பரம்பொருள் உங்களுக்கு சாந்நித்யமாகும்' என்றும் சொல்லப்படுகிறது.

பல்வேறு மதங்கள் இருக்கின்றனவே இதன் பொருள் என்ன? ஒவ்வொரு மதமும் மனிதன் தன் னிலிருக்கும் கடவுள் தன்மைமை வெளிப்படுத்தவும் பரம்பொருளோடு தொடர்பு கொள்ளவும் செய்யும் முயற்சிதான். இதில் என்ன பேதம்?

இந்து மதத்தின் கொள்கையே எல்லா மதங்களும் அடிப்படையில் ஒரே நோக்கம் கொண்டவை என் பதுதான்.

மனிதன் தன்னுள் மறைந்து கிடக்கும் தெய்வாம் சத்தை பரிபூரணமாக உணர்ந்துகொள்ளச் செய்யும் முயற்சிதான் மனிதவாழ்க்கை என்கிறது இந்துமதம்.

வாழ்க்கைப் பயணம் என்பது நாம் சாதாரணமா கப் பயன்படுத்தும் சொல். இந்தப் பயணத்தை எதற் காக மேற்கொண்டிருக்கின்றோம்? சில விஷயங்களை அடைய; சிலவற்றை உணர; சிலவற்றிலிருந்து தப் பித்துக்கொள்ள

ஐந்து நல்ல குணங்கள். இவற்றையடைந்தால் போதும். மற்ற நல்லவை தானாக நடக்கும்.

இந்த ஐந்தில் ஒரு தனி மனிதன் அடையவேண்டிய நல்ல குணங்கள் மூன்று — தூய்மை, தன்னடக்கம், பற்றில்லாமை.

மற்ற இரண்டும் சமுதாயத்துக்கே இருக்கவேண் டிய குணங்கள்: உண்மை, அஹிம்சை.

இந்த குணங்கள் என்ன என்பதை நன்றாகப் புரி ந்துகொள்ள வேண்டும். தூய்மை என்பது உள்ளும் புறமும் தூய்மையாவது. இதைத்தான் திருவள்ளுவர்

'புறம்தூய்மை நீரான் அமையும் அகம்தூய்மை
வாய்மையான் காணப்படும்'. என்றார்.

நீரில் குளிப்பதால் மட் டும் சுத்தம்வந்துவிடாது. நல்ல எண்ணங்களை எண்ணுதல், நல்லவார்த் தைகளைப் பேசுதல், பொறாமை - அகங்காரம் இவற்றிலிருந்து விடுபட்டிருத்தல் இவையும் ஒருவனை தூய்மைப்படுத்தும்.

தன்னடக்கம் பாவச்செயல்களிலிருந்து நம்முடைய உடல், மனம் இரண்டையும் காப்பாற்றும் ஒரு கவசம்

உண்மை என்பது விரிவான பொருள் கொண்டது.

நியாயமான கருத்து, நேர்மையான வழி, இதெல் லாம் சத்யத்துக்குள் அடங்கும்.

சத்யத்தைக் கடைப்பிடிப்பதென்பது எளிதானது அல்ல. இதை பல உதாரணங்கள் மூலம் இதிகாசங்க ளும் புராணங்களும் எடுத்துச் சொல்கின்றன.

உண்மையைப் பேசுவதும், அவரவர் கடமையைச் செய்வதும் ஒன்றுக்கொன்று தொடர்புடையவை என்று தெரிகிறது.

இதை மனத்தில்கொண்டு ஒவ்வொருவரும் நடந் தால், சமுதாயம் எப்படிப்பட்டக்கட்டுக்கோப்புடன் இயங்கும். அமைதியும் மகிழ்ச்சியும் நிலவும் என்ப தும் தெரிகிறது.

ஐந்தாவதான குணம் அஹிம்சை. அஹிம்சையை மேலான குணமாகக்கருதும் மதம் இந்துமதம். இதை பெரிதும் போற்றிய மகான்கள் பிறந்த புண்ணிய பூமி இந்துஸ்தான்.

அஹிம்சை - பிற உயிர்களைத் துன்புறுத்தாமலிருத் தல், பிற உயிர்களைக் கொல்லாமலிருத்தல் ஒரு சிறந்த குணமாகக் கருதப்படுகிறது. தினமும் நாம் அறிந்தோ, அறியாமலோ செய்கிற அஹிம்சைக ளுக்கு பிராயச் சித்தங்கள் சொல்லப்பட்டிருக்கிறது இந்து சாஸ்திரங்களில்.

ஓரற்ற உயிர், ஈரற்ற உயிர் என்று இந்தப் பிரபஞ் சத்தில் இருக்கிற உயிர்கள் எல்லாவற்றிலும் மேலான மனிதப் பிறவியில் பிறந்த நாம் பிற உயிர்களை— நமக்குக் கீழ்நிலையிலிருக்கும் உயிர்களை துன்புறுத் துதலும், கொல்லுதலும் தகாததன்றோ?

இந்து மதம் 'உடலை வருத்து, உடலைப் பட்டினி போடு, உடல் இச்சைகளுக்கு இடம் கொடாதே' என்று சொல்லவில்லை. உடல்தான் எல்லாம் என்று எண்ணி ஏமாந்துவிடாதே என்றுதான் சொல்கிறது. உடலுக்கு எந்தளவு முக்கியத்துவம் கொடுக்கவேண் டுமோ அதற்குமேல் கொடுத்துவிடாதே என்றுதான் எச்சரிக்கிறது.

(தொடர்ச்சி 15ம் பக்கம்)

தூணிலும் இருக்கிறான், பரமன் துரும்பிலும் இருக்கிறான், என்று பிரகலாதன் சொன்னதுபோல நம்மிலும் இருக்கிறான் பரமன். நம்மைச் சுற்றுயுள்ள உயிர்கள் அனைத்திலும் இருக்கிறான் என்ற எண்ணம் அழுத்தமாக மனதின் அடித்தளத்தில் வந்துவிட்டால், அப்புறம் பிற உயிர்க ளிடத்தில் அன்பு செலுத்தத் தோன்றுமே ஒழிய உயிரைக் கொல்லத் தோன்றுமா?

# உள்ளுவதெல்லாம் உயர்வுள்ளல்

செல்வி ஆர். கலாராணி

உள்ளுதல் என்பது சிந்திப்பது என்ற கருத்தைக் கொடுக்கக்கூடிய ஒரு சொல்லாகும். சிந்திக்கத் தெரிந்த சீவராசியே மனிதன் என்று சொல்வதை விட, சிந்திப்பதனாலேயே மனிதன் அப்பெயரைப் பெற்றான் என்று கூறுவது பொருத்தமாக இருக்கும். ஏனெனில், ''மன்'' என்ற சொல்லே நினைப்பது என்ற கருத்துப்படுகின்றது. இதிலிருந்து சிந்திக்கத் தெரிந்த ஒரு சீவராசியே மனிதன் என்பதும், அவனது சிறப்பம்சமும் அதுதான் என்பதும் விளங்குகின்றது. ஆம், அது உண்மைதான். ஏனெனில் மிருகங்களும் உணவு உண்கின்றன, உறங்குகின்றன, இனம் பெருக்குகின்றன. இவற்றைமட்டுமே மனிதன் செய்வதானால், அவன் மிருகத்திலிருந்து வேறாகிவிட முடியாது. ஆகவே, மனிதனுக்கும் மிருகத்துக்கும் ஏதாவது வித்தியாசம் இருக்குமானால், அது அவனது சிந்திக்கும் திறனேயாகும். அதனால்தான் மனிதன் மட்டுமே ஆறாவது அறிவாகிய பகுத்தறிவைப் பெற்றவன் என்ற பெருமைக்குமுரியவனாகின்றான்.

இந்தப் பகுத்தறிவைப் பாவித்து உள்ளம் செயல் சிந்திப்பது. மனமானது ஒரு கணநேரமேனும் சும்மா இருக்காமல் எதையாவது எண்ணிக்கொண்டேயிருக்கும். 'பார்க்காமல் இரு' என்று கண்ணைக் கொஞ்ச நேரம் மூடிக்கெண்டால், அது பார்க்காமல் இருக்கும். அவ்வாறே 'பேசாதே' என்று வாயையும் எமது கட்டுப்பாட்டிற்குள் வைத்துவிடலாம். ஆனால் இந்த மனதை மட்டும் 'சும்மா இரு' என்று சொல்லி அரைக் கணமேனும் வைத்திருக்கமுடியாது. என்ன எண்ணுகிறோம் என்பதை நாம் உணரும் முன்பே அது ஓராயிரம் எண்ணங்களை எண்ணிவிடுகின்றது. அந்தவகையில் ஒவ்வொரு மனிதனும் அவனவனது தரத்திற்குத் தக்கவாறு எதையாவது சிந்திக்கவே செய்கின்றான் என்பதை எம்மால் புரிந்துகொள்ள முடிகின்றது.

## பலவகை சிந்தனைகள்

சிந்தனை என்றால் எல்லாமே சிந்திப்பதுதானா? அது பலவகைப்படுகின்றது. குழந்தை சிந்திப்பது என்ன குறும்பை அடுத்துச் செய்யலாமென்று. இளைஞன் சிந்திப்பது நமது பொழுதை எவ்வாறு உல்லாசமாகக் கழிக்கலாமென்று, குடும்பப் பொறுப்புள்ள மனிதர்களைப்பற்றியோ குறிப்பிடவே வேண்டியதில்லை. அல்லும் பகலும், எவ்வாறு தமது வாழ்க்கைச் சக்கரத்தைச் சுழற்றலாம் என்பதே அவர்தம் முழுநேரச் சிந்தனை. இவ்வகைச் சிந்தனைகளெல்லாம் ஒரு குறிப்பிட்ட வகைக்குட்பட்டவை.

அறிஞன் சிந்திக்கும்போது நாம் அறிவுக்களஞ்சியங்களைப் பெறுகின்றோம். விஞ்ஞானிகளின் எண்ணங்களே இன்று பல வியக்கத்தக்க சாதனைகளுக்கு வழிவகுத்திருக்கின்றன. மேதைகளின் மேதாவிலாசத்தின் விளைவுகளே காலத்தை வென்ற அமரப்படைப்புகளாய் உலகில் உலவுகின்றன. ஞானிகளின் சிந்தனை தத்துவ ஞானங்களுக்கு வித்திடுகின்றது.

மொத்தத்தில் பார்க்கும்போது சிந்தனை என்பது எல்லோரும் செய்வது ஒன்று என்பது மட்டுமன்றி எல்லோராலும் செய்யப்பட வேண்டியதொன்று என்பதும் புலனாகின்றது. இனி உள்ளத்தால் செய்யப்படும் உள்ளுதல் எவ்வாறிருக்க வேண்டும் என்பதைப் பார்ப்போம்.

## உள்ளம் எவ்வாறு உயர்வடைகின்றது

இவ்வுலகிலே மிருகங்கள் குறுக்கே வளரும் தன்மையையுடையவை. மனிதன் ஒருவனே நெடிது வளர்ந்து உயர்வாகச் சிந்திக்கக்கூடியவன். ஆகவே மனிதனது உள்ளத்தில் எழுவன எல்லாம் உயர்ந்ததாக அமைந்தாலேயே அவனது உணர்ச்சிகளும், வெளிப்பாடுகளும் உயர்வானவையாக அமையும். ஏனெனில், ஒரு செயலுக்கோ, வாக்குக்கோ உற்பத்தி ஸ்தானம் அவனது உள்ளமே. உள்ளத்தைப் பொறுத்தே ஒருவனது உயர்வும் அமைகின்றது. அதனால்தான் தெய்வப் புலவரும்;

> ''வெள்ளத்தனையது மலர்நீட்டம் மாந்தர் தம்
> உள்ளத்தனையது உயர்வு''

என்று பகிர்கின்றார். அதாவது ஒரு மலரின் உயர அளவு அது அமைந்துள்ள நீரின் உயரத்தைப் பொறுத்தே இருப்பது இயற்கை. அதேபோல் ஒரு மனிதனின் உயர்வும் அவன் உள்ளத்தில் எழுகின்ற எண்ணங்களின் அளவைப் பொறுத்தேயமையும். ''கருதலும் செய்தலோடொக்கும்'' ஆகவே உயர்வானதைச் சிந்திப்பவன் உயர்வானதையே செய்தவனாகின்றான். மனதைக் கட்டுப்படுத்திச் சிந்திக்காமல் இருப்பதைவிட உயர்வானதைச் சிந்தித்தல் சுகமானது. ஏனெனில் சித்தத்தையடக்கியே சும்மா இருக்கின்ற திறமரிது'' என்றும் ''சும்மா இருத்தலே சுகம்'' என்றும் முற்றும் துறந்தவர்களே பகர்கின்றனர். அவ்வாறான நிலைமை ஆன்மீகத்தின் அடித்தளத்திலேயே நிற்கும் எம்மைப் போன்றவர்களால் அடைய இலகுவானதொன்றல்ல. ஆகவேதான் சிந்திப்பதையெல்லாம் உயர்வாகச் சிந்தித்தாவது மனிதன் தனது நிலையை உயர்த்திக்கொள்ள முயல வேண்டும்.

(தொடர்ச்சி 17ம் பக்கம்)



# முதலாவது இந்து கலைக் களஞ்சியம்

# வெளியீட்டு விழா!

**தமிழ் மொழியில் எழுதப்பட்ட முதலாவது இந்து கலைக் களஞ்சியத்தை அமைச்சர் தேவராஜ் வைபவரீதியாக வெளியிட்டு வைத்தார். வரலாற்றில் முத்திரையிடப்பட்ட இவ்வரியமுயற்சி தமிழ்பேசும் நல்லுலகிற்கு அத்தியாவசியமானதும், அறிவுக்கண்ணைத் திறப்பதற்கான அரும்பெரும் பொக்கிஷமுமாகும்.**

நெருக்கடிமிக்க நாட்டின் இக்கட்டான சூழ்நிலைகளுக்கு மத்தியிலும் கடந்த 12.8.1990 ஞாயிற்றுக்கிழமை மாலை பம்பலப்பிட்டி புதிய கதிரேசன் மண்டபத்தில் மேற்படி வெளியீட்டு விழா அமைதியான முறையில் எளிமையாக நடைபெற்றது.

சிறப்பு விருந்தினர்களாக மாண்புமிகு அமைச்சர்களான சௌ. தொண்டமான், ஜே. எம். லொக்குபண்டார பி.வி.கவிரத்ன, மாண்புமிகு இராஜாங்க அமைச்சர்களான எம். எஸ். செல்லச்சாமி திருமதி. புலேந்திரன் ஆகியோர்கள் அழைக்கப்பட்டிருந்தபோதும் ஒரு அமைச்சராவது மேற்படி விழாவிற்கு வருகை தராமல் இருந்தது கவலையளிக்கக்கூடியதாகவே இருந்தது.

கலைக்கே அதிபதியான கூத்தபிரானின் சிலை ஒருபுறமும் அறிஞர்களும், ஆய்வாளர்களும் தமிழ் வல்லுநர்களும் பேராசிரியர்களும், சிவாச்சாரியார்களும் இராமகிருஷ்ண மிஷன் சுவாமிஜியும் ஒருபுறமும், மேடையில் வீற்றிருந்தமை விழாவிற்கு மெருகூட்டுவதாக அமைந்திருந்தது.

கொழும்பு இராமநாதன் மகளிர் கல்லூரியைச் சேர்ந்த ஐந்து மாணவிகள் தமிழரின் ஒப்பற்ற பாரம்பரிய மரபுக்கிணங்க 'தமிழ்குலப் பெண்களாக' இறை வணக்கம் செலுத்தி விழாவை ஆரம்பித்து வைத்தமை உணர்வுகளை மெய்சிலிர்க்க வைத்தது. அதனைத்தொடர்ந்து வரவேற்புரையும், சிவாச்சாரியர்கள் ஆசியும் நல்கினர். சாஸ்தாபீடாதிபதி ஸ்ரீ ஐயப்பதாஸன் சாம்பசிவ சரவணபவ குருக்கள் ஆசி வழங்கிய விதம் சிறப்பாகவும், எமது நாட்டுமக்களின் நலனுக்காக மேற்படி குருக்கள் அருள் வேண்டி ஆசி வழங்கியமை விஷேசமாக இருந்தது.

ஆதியும் அந்தமும் இல்லாதபடியால் இந்து மதம் 'சனாதனம்' எனும் சிறப்புப் பெயர் பெற்றது என கொழும்பு இராமகிருஷ்ணமிஷன் சுவாமி ஜீவானந்தாஜி ஆசியுரையாற்றினார்.

ஆடிவேல்விழாவிற்கு சிறப்புரை ஆற்ற இந்தியாவிலிருந்து வருகைதந்த கலாநிதி திருமதி நம்பி ஆருரன் சிறப்புச் சொற்பொழிவாற்றினார். சி. வை. தாமோதரம்பிள்ளை போன்ற ஈழத்து மக்களே தமிழ் நாட்டவர்க்கு வழிகாட்டிகளாக இருந்தவர்கள், இப்படியான இவர்கள் இல்லையென்றால் இன்றைய ஒப்பற்ற நிலையை கனவிலும் கண்டிருக்க முடியாது என அம்மையார் இனிய தமிழில் ஆற்றிய சிற்றுரைக்கு மண்டபத்தில் அமோக வரவேற்பு கிடைத்தது. இதனைத் தொடர்ந்து களஞ்சியம் வெளியிடப்பட்டது. முதலாவது பிரதியை கொழும்பு ஜெயந்தி

ஜெய்நிவேத்

நகர் ஜிந்துப்பிட்டி ஸ்ரீ சிவசுப்ரமணிய சுவாமி ஆலயத்தின் தர்மகர்த்தாவும் சமாதான நீதவானும் பிரபல தொழிலதிபருமான அருட்செல்வர் திரு. வி. ரி. வி. தெய்வநாயகம்பிள்ளை அவர்களுக்கு அமைச்சர் வழங்கினார். இரண்டாவது பிரதி அகில இலங்கை இந்துமாமன்ற செயலாளர் திரு. பாலசுப்பிரமணியத்திற்கும் வழங்கப்பட்டது. மேலும் திரு. செந்தில்வேலவர், திரு. இராஜபுவனீஸ்வரன், திரு. யோகேந்திரா துரைசாமி, கொழும்பு இந்துகலாசார மறைத் தலைவர் திரு. வைத்தமாநிதி போன்றோர்களும் இன்னும் பலரும் அமைச்சரிடமிருந்து பிரதிகளை பெற்றுக்கொண்டனர்.

விழாவிற்கு வருகை தந்திருந்த மக்களை பரவசப்படுத்துவதற்காக இசைக்கலாமணி சிவஸ்ரீ இரா. நீதிராஜசர்மா அவர்களும், திரு. சிவகுமார் அவர்களும் இன்னிசை விருந்து வழங்கினார்கள். சங்கீத ரசனைமிக்க பாடல்கள் செவிகளுக்கு இனிமையை தந்தபோதிலும், இப்படிப்பட்ட தமிழ், கலாசார விழாக்களில் இவர்கள் 'சங்கராபரணம்' போன்ற மலையாளப் படத்தில் வரும் பாடல்கள்; அந்நிய மொழிப் பாடல்களை பாடியமை, மண்டபத்தில்

(தொடர்ச்சி 6ம் பக்கம்)

# ஆடி வேல் விழா

கொழும்பு ஜெயந்திநகர் ஜிந்துப்பிட்டி ஸ்ரீ சிவ சுப்பிரமணிய சுவாமி கோயிலில் ஆடிவேல் விழா மிகவும் சிறப்பாக நடைபெற்றது. நாட்டில் இன் றைய இக்கட்டான சூழ்நிலைகளுக்கு மத்தியிலும் அடியார்கள் வேலவனின் அருள் வேண்டி ஆலயத் திற்கு திரண்ட வண்ணமிருந்தனர்.

வருடாவருடம் ஆடிவேல் விழாவினை ஒட்டி நடைபெறும் விஷேட நிகழ்ச்சியாக, தென்னிந்தியா விலிருந்து பிரபல பேச்சாளர்களையும், இசைமேதை களையும் வரவழைத்து அடியார்களுக்கும் அன்பர் களுக்கும் அரிய கருத்துக்களை வாரி வழங்குவதில் ஜெயந்திநகர் ஜிந்துப்பிட்டி ஸ்ரீ சிவசுப்பிரமணிய சுவாமி கோயில் தனக்கென ஒரு தனியிடத்தைப் பிடித்து முன்மாதிரியாகத் திகழ்வது பாராட்டக் கூடியது.

பித்துக்குளி முருகதாஸ், சூலமங்கலம் சகோதரிகள், திருமதி இளம்பிறை மணிமாறன், புலவர் கீரன், கலாநிதி சரஸ்வதி ராமநாதன் போன்ற வல்லுனர் களின் வரிசையில், இம்முறை ஆடிவேல் விழாவினை டாக்டர் திருமதி சாரதா நம்பி ஆரூரன் சிறப் பித்து கருத்துள்ள சிறந்த சொற்பொழிவை நிகழ்த் தினார்.

---

(5ம் பக்க தொடர்ச்சி)

**முதலாவது . . .**

குழுமியிருந்த மக்களின் இதயங்களில் அதிர்ப்தி நில வியமையும் இங்கு கவனத்தில் கொள்ளப்படல் வேண் டும். இனிமேலாவது இப்படிப்பட்ட குறைகளை நிவர்த்திசெய்து, தமிழின் தனிப்பெருமையை உல குக்குணர்த்த முன்வரவேண்டும்.

போக்குவரத்து இராஜாங்க அமைச்சின் செயலா ளர் திரு. செ. குணரத்தினம், இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபன தமிழ்ப்பிரிவு கட்டுப்பாட்டாளர் திரு. எஸ். ஹரிஹரசர்மா, முன்னைநாள் இந்து சமய, கலாசார அலுவல்கள் அமைச்சின் பணிப்பாளர் திரு. வி. என். சிவராசா, தினகரன் பிரதம ஆசிரியர் திரு. ஆர். சிவகுருநாதன், வீரகேசரி பிரதம ஆசிரி யர் திரு. ஏ. சிவநேசச்செல்வன் போன்றோர் கருத் துரை வழங்கினார்கள்.

இல்லங்கள்தோறும் 'குர்ஆன்' வைத்திருக்கும் முஸ் லிம் மக்களைப்போன்று, ஒவ்வொரு இந்து இல்லங் களிலும் இவ்வரிய பொக்கிஷமான 'இந்து கலைக் களஞ்சியம்' வைத்திருத்தல் வேண்டும். இத்துடன் முற்றுப் பெறாமல், தொடர்ந்தும் ஏனைய எழுத் துக்களினாலான கலைக்களஞ்சியங்கள் வெளியிடப் படல் வேண்டும் என இரத்தினச் சுருக்கமாக திரு. ஆர். சிவகுருநாதன் கருத்துரை வழங்கினார்.

தமிழ்மொழியில் அகராதிகள் பல தோன்றியிருந் தாலும் கலைக்களஞ்சியம் ஒன்று இல்லாதது மிகவும் பாரிய குறைபாடாகவே இருந்தது. அதனை நிவர்த்தி செய்யுமுகமாக, கலைக்களஞ்சியத்தை பேராசிரியர் பூலோகசிங்கம் தொகுத்தது பாராட்டத்தக்க பணி யாகும். மேலும், இவ்வகையான கலைக்களஞ்சியம் தனியொரு நபரால் தொகுக்கப்படுவதைவிட, ஆசி ரியர் குழுவொன்றமைத்து அதன்மூலம் தொகுப்பது சாலவும் சிறந்தது. மேற்படி கலைக்களஞ்சியத்தில் நெறியமைப்பும் திட்ட அமைப்பும் இல்லாததையும் சுட்டிக்காட்டி கருத்துரை வழங்கிய வீரகேசரி பிர தம ஆசிரியர் திரு. சிவநேசச்செல்வன் பேராசிரியர் பூலோகசிங்கத்தை நடமாடும் ஒரு பல்கலைக்கழகம் என வர்ணித்தார்.

அமைச்சர் தேவராஜ் பேராசிரியர் பூலோகசிங்கத் திற்கு பொன்னாடை போர்த்தி, வெண்கலத் தட் டொன்றை வழங்கி ஆசிரியரின் அளப்பரிய பணியை பாராட்டி கௌரவித்தார். அதனைத் தொடர்ந்து மேலும் சில அன்பர்கள் ஆசிரியருக்கு பொன்னாடை போர்த்தி கௌரவித்தனர்.

கலைக்கும், கலைக் களஞ்சியத்திற்குமென ஓர் தனி யான அமைப்பை அமைச்சில் ஏற்படுத்தி, இந்த கலைக்களஞ்சியத்தைப் போன்று மற்றைய அனைத்து எழுத்துக்களையும் உள்ளடக்கியதான கலைக்களஞ் சியங்களையும் எத்தனை சிரமங்களை எதிர்நோக்கி னாலும் வெளியிட்டே தீருவோம் என சூளுரைத்தார்.

பெற்றோரைப்பிரிந்து, கணவனைப்பிரிந்து, மனை வியைப்பிரிந்து, பெற்ற பிள்ளைகளைப்பிரிந்து, உற வினரைப்பிரிந்து, உயிரையும் உடமைகளையும் இழந்து கண்ணீரும் கம்பளையுமாக பரிதவிக்கும், எமது நாட்டின் இந்துமதத்தைத் தழுவும், தமிழ் பேசும் மக்களுக்காக, அகதிகளாகியிருக்கும் இலட் சக்கணக்கான எமது மக்களுக்காக, அனுதாபப்பட் டதுடன், மக்களின் இன்னல்கள் விரைவில் நீங்கி நிம்மதியான வாழ்வு கிட்ட இறைவனை பிரார்த் தனை செய்தமை, அமைச்சர் தமிழர்கள்பால் கொண் டுள்ள அக்கறையை அப்பட்டமாக வெளிப்படுத்து வதாக இருந்தது.

இந்து கலைக் களஞ்சியம் நூலுருவில் வெளிவரு வதற்கு ஆக்கமும் ஊக்கமும் தந்த அத்தனை பேருக் கும் ஆசிரியர் நன்றி தெரிவித்து பாராட்டினார். அந்த அத்தனை பேர்களுள்ளும் திரு. எஸ். தெய்வ நாயகத்தின் சிறந்த சேவைக்கு மலர்மாலை அணி வித்து பாராட்டைத் தெரிவித்தார்.

திருமதி சாந்தி நாவுக்கரசன் நன்றியுரை செலுத்த மீளவும் இராமநாதன் மகளிர் கல்லூரி மாணவிக ளின் இறைவணக்கத்துடன் விழா இனிதே நிறைவு பெற்றது.

செந்தமிழில், தேமதுரத் தமிழோசையில் நிகழ்ச்சி யினை இனிமையாக தொகுத்து வழங்கிய முன்னை நாள் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபன அறிவிப் பாளர் திருமதி உமாசந்திரா சிவலோகநாதன் காது களுக்கு இனிய குரலில் தெவிட்டாத வகையில் வழங் கினார்.

# வியாழ சுகமும் அதனால் விளையும் பலன்களும்

மனித வாழ்க்கை, இயற்கையின் சக்தியின் பிடியில் சிக்கி அல்லலுறும்போது அதற்கு மீள்ச்சி அளிப்பதற்காக இந்துசமய நம்பிக்கையில் கிரகங்களின் வலிமை முதலிடம் பெறுகின்றது. ஏனைய மதங்களைச் சார்ந்தவர்களுக்கும் இந்த நம்பிக்கை உண்டு எனக் கூறலாம். இந்த வகையில், கிரகங்களின் மாற்றம் விஞ்ஞான ரீதியாக எடுத்துக்கொண்டாலும் சரி, சோதிட ரீதியாக பார்த்தாலுங்கூட அதிகளவு தாக்கத்தை பூமிக்கும், மனிதர்களுக்கும் அளிப்பதில் முதலிடம் வகிக்கின்றது என்றால் மிகையாகாது.

**வியாழன் மாற்றத்தால் நமது நாட்டிற்கு விமோசனம், நிம்மதி ஏற்படுமா, அல்லது அழிவுகள் தொடருமா, சமாதானம் தோன்றி மக்கள் நிம்மதியாக வாழ்வது எப்போது ?**

சோதிட ரீதியாகப் பார்க்கும்போது நவக்கிரகங்களில் சனி, குரு, இராகு, கேது இவைகளின் மாற்றங்கள் பெரும்பாலும் பலவிதத் தாக்கத்தை ஏற்படுத்துகின்றன. இந்துக்களைப் பொறுத்தவரை எந்தக் கருமத்தை எடுத்துக்கொண்டாலும் அவைகளை சோதிட ரீதியாகப் பார்த்துத் தொடங்குவது வழக்கம். காலங்களையும் நேரங்களையும் பார்த்து கருமமாற்றும் இவர்களது வாழ்க்கையில் கிரகங்கள் மாற்றமடையும்போது மனதில் ஒருவித பீதியை ஏற்படுத்தத்தான் செய்கிறது. ஏனெனில் மாற்றமடையும் கிரகம் எந்த வகையில் தங்களுக்கு சாதகமாக அமைவுபெறுகிறது. என்ன பலாபலன்களை கொடுக்கப்போகின்றது என்பதைப்பற்றிய ஏக்கமே அதிகமாக அனைவர் மனதிலும் பிரதிபலிக்கிறது.

சனிபகவான் ஒரு வீட்டில் (இராசி) இருந்து இன்னொரு வீட்டிற்கு செல்வதற்கு இரண்டரை வருடங்கள் எடுக்கின்றார். ஆனால் குரு பகவான் ஒரு இராசியிலிருந்து இன்னொரு இராசிக்கு செல்வதற்கு ஏற்படும் இடைத்தூரம் ஒரு வருடமாகும். இந்த ஒரு வருடத்தில் அவர் செய்யும் நன்மை தீமைகள் அளவிடற்கரியன 'குரு பார்த்தால் கோடி நன்மையுண்டு' என்பது சோதிடக் கூற்று, அவர் பார்வை பட்டாலே பாவங்கள் நீங்கி, பலவிதப் பேறுகளைப் பெறக்கூடிய தன்மைக்கு ஆளாக்கும், அதேவேளையில் சாதகத்தில் பாதகமான இடத்திற்கு வந்தாலுங்கூட அவரின் இடர்கள் பலவித சோதனைகளை ஏற்படுத்தாமல் விட்டபாடில்லை.

மற்றவர்கள் உனக்கு என்ன செய்யக்
கூடாது என்று நினைக்கிறாயோ அதை
நீயும் மற்றவர்களுக்குச் செய்யாதே.
— கன்பூசியஸ்

நல்லோன், நல்லாசிரியன், புத்திமான், பலசாலி, பராக்கிரமத்தன்மை மேலானவன், உயர்வளிப்பவன் என்னும் தன்மை பொருந்திய வியாழபகவான் ஒரு சுபக்கிரகம் ஆவார். தெய்வீகத் தன்மையும் வேத நூல் அறிவும் கொண்டவர். சாத்வீக குணமுடையவர். ஒரு நல்ல இடத்தில் சாதகத்தில் தங்கினாலும் அதுவும் 1, 2, 4, 5, 7, 9, 10, 11ம் இடங்களில் பலம்பெற்று சுபக்கிரகங்களின் பார்வையுடன் இருந்தாலும், சாதகர் பலவித சௌபாக்கியங்களும் பெற்று அரசியல் போன்ற துறைகளுடன் உயர் பதவி வகித்து சுகபோகங்களுடன் வாழ்வார்.

## தில்லை

குரு பகவானுக்குரிய சொந்த வீடுகள், தனு, மீனம் ஆட்சி வீடும் அதுவே உச்சவீடு கடகம், நீசவீடு மகரம். செவ்வாய், சூரியன், சந்திரன், சனி நட்புக்கிரகங்களாகவும், புதன், வெள்ளி, இராகு, கேது, பகைக் கிரகங்களாகவும் கொண்டுள்ள தன்மை குருவுக்குண்டு. தான் இருக்கும் இடத்திலிருந்து 5, 7, 9ம் வீடுகளையும் பார்த்து தன் செல்வாக்கைப் பிரயோகித்து அந்த இராசிக்காரர்களையும் நல்வழிப்படுத்துவார், ஆண்கிரகம், புஸ்பராகம் இவரது ஆபரணம். முல்லை இவரது மாலை. தங்கம் உடையாகவும், யானை வாகனமாகவும், இனிப்பு இவரது ருசியாகவும், நீள்சதுர வடிவமாகவும், பகல் வலிமையாகவும், வயிறு உறுப்பாகவும், முளைகடலை, ஆம்பல் இவரது உணவாகவும்கொண்டு தட்சணாமூர்த்தி என்ற நாமம் பொருந்தி கிரகநிலையில் சாதுவான கிரகமாக தோற்றமளிக்கின்றார்.

கடலையே இவருக்கு விருப்பமான உணவாகும். எனவே வியாழ சுகம் வேண்டி நிற்பவர்கள் கடலையை வியாழக்கிழமை தோறும் எடுத்துச் சென்று வியாழபகவானின் பாதடியில் வைத்து வணங்கிவருவதோடு, அன்றைய தினம் கடலை, பால், பாயாசம் உண்டு விரதம் இருந்துவந்தால் அவருடைய தீய பார்வை அகன்று நன்மை ஏற்பட வழிபிறக்கும் என்பது சாத்திரவிதி. இத்தகைய பலவித உயர்ந்த குணங்களையும், சம்பத்துக்களையும் தன்னுள் வைத்திருக்கும் குரு பகவான் வாக்கிய பஞ்சாங்கத்தின்படி 15-7-90 ஞாயிற்றுக்கிழமை மிதுன இராசியிலிருந்து தனது உச்ச வீடான கர்க்கடக இராசிக்குள் செல்கின்றார். ஆனால் திருக்கணித பஞ்சாங்கத்தின்படி 20-7-90 வெள்ளிக்கிழமை மிதுனத்திலிருந்து கடகத்திற்கு செல்வதாக கூறப்பட்டுள்ளது. இந்த இரண்டு பஞ்சாங்கக்காரர்களும் எப்போது ஒன்றுபட்டு வருகிறார்களோ அன்றே இந்துக்களின் மனநிலைக்கு புதுதெம்பு ஏற்படும். அவர்கள் எப்படி செயற்பட்

(தொடர்ச்சி 14ம் பக்கம்)

# பட்டினத்தடிகளின் ஆசைக்கோர் விளக்கம்

ஆசை கயிற்றிலாடும் பம்பரம் என்கிறார். மனிதன் தன் ஆசைகளுக்காகவே ஆடி ஓடி வேலை செய்கின்றான். ஆசையைப் பூர்த்திசெய்துகொள்ளப் பல வழிகளைக் கையாள்கிறான். பொய்சொல்லத் தயங்கமாட்டான். இழிந்த காரியத்தையும் கொலையையும் செய்யத் துணிவான். தினம்தினம் நல்லமுறையிலோ, கெட்ட வழிகளிலோ பணத்தைத் திரட்டி பரத்தையருக்குக் கொடுத்து, அவர்கள் மையலில் இன்புறுவார்கள். இந்நிலை அவர்களது மரணம் வரை தொடர்ந்துகொண்டேயிருக்கும்.

உலகமே மாயை, எதுவுமே நிலையானதல்ல. செல்வமோ, சுகபோகமோ, மனைவி மக்களோ எதுவுமே நிலையானதல்ல. ஒருவன் பிறந்த ஊர், அவன் வாழ்நாள் முழுவதும் அங்கேயே தங்கியிருக்க உதவும் என்பது நிச்சயமல்ல. வேலை தேடி வேற்றூர் செல்ல நேரிடலாம். உறவினர்கள் எப்போதும் நல்லமுறையில் உறவாடிக்கொண்டிருப்பார்கள் என்று நிச்சயமாகக் கூறமுடியாது. மனைவியோ ஆதரவாக இருப்பாள் என்று திடமாக நம்பமுடியாது. ஏதாவது ஏற்றத்தாழ்வு அல்லது சண்டை சச்சரவு ஏற்பட்டாலோ கணவனை விட்டுவிட்டுத் தாய்வீடு சென்றுவிடுவாள். பெற்ற பிள்ளைகளோ அப்பன் தலை எப்போது சாயும், சொத்தைப் பங்குபோடலாம் என்றிருப்பார்கள். தகப்பனுக்குத் தம் கடமையைச் செய்யமாட்டார்கள். சொத்துபத்தாவது நிலைத்திருக்குமா? வருங்காலத்து வந்ததுபோல போகுங்காலத்து மறைந்துவிடும். செல்வம் செல்வதற்கு வருவதுதானே. இவையெல்லாம் தெரிந்தும் அதன் மயக்கத்தில் வீழ்ந்து மடிகிறான். விதியின் விளையாட்டென்பதை உணரமாட்டான். காதைப்பார், கண்ணைப்பார், மூக்கைப்பார் என்று ஒவ்வோர் அங்கமாகக் காட்டி தன் அழகை வர்ணித்துக்கொண்டு எதிரே வந்து நிற்கும் பெண், கூற்றுவனால் அனுப்பப்பட்ட மாயா மோகினி என்று உணர்வதில்லை. மாறாக தனக்கு இன்பம் அளிக்க வந்த தேவலோகக் கன்னியாக நினைத்து அவள் மையலில் மயங்கிவிடும் கேடுகெட்டவர்கள். நிலையில்லாத இந்த உடலை பாதுகாக்க மனிதன் பலவுயிர்களைக் கொன்று அவற்றின் ஊனினைத் தின்று? கர்வப்பட்டு பிறகு உடல் மெலிந்து கூற்றவன் வந்துபிடித்து தண்டனை அளிக்கும்போது என்ன செய்வார்கள்? சரீர சுகத்தைத் தரும் சிற்றின்பத்தையே நாடி அதற்காகப் பொருள் தேடியலைந்து பொன் திரட்டி அதைப் பெண்களுக்குக் கொடுத்து இன்பத்தை அனுபவித்து இறக்கிறான்.



எழுத்தாணி பிடிக்கவேண்டிய எமதருமை பாலகனே, ஏன் இந்தத் துப்பாக்கியை நாடினாய்? அகிலத்தையே நொடிப்பொழுதில் அழித்தொழிக்கும் அணுவிலும் பார்க்க; சர்வவல்லமை வாய்ந்த அன்புக்கு உந்தன் துப்பாக்கி எந்த வகையிலும் ஈடாகுமா?

பி. எஸ். இராஜேந்திரன்

மனிதன் பணம் பணமென்றலைந்து அதை ஏராளமாக சம்பாதித்து அதனை நல்ல காரியங்களுக்கு செலவிடாமல் கேடு கெட்ட மாதருக்கு அளித்து மகிழ்வான். பணமெல்லாம் செலவழிந்ததும் அந்தப் பெண்கள் இவர்களை ஏறிட்டும்பார்க்காமல் வெறுத்தொதுக்குவார்கள். அறிவால் உணர்ந்துவிடு இல்லையேல் அனுபவம் காட்டிவிடும்.

பெண்களைக் கலந்துமகிழ்ந்து அவர்களுடன் காதல் விளையாட்டில் ஈடுபடும் மனிதனே ஒன்று கூறுகிறேன். கல், முள் ஆகியவற்றின்மீது நடக்கும் பெண்களின் பாதங்கள் இலவம்பஞ்சாகும். எலும்பை மூடி மறைத்திருக்கும் சதை நிரம்பிய கால்கள் துள்ளிப் பாயும் விரால்மீன் ஆகும். எலும்பும் தசையும் உள்ள தொடைகள் வாழைத் தண்டாகும். உடலின் பாரத்தை சுமந்து நிற்கும் இடை உடுக்கைபோன்று பிடியளவுள்ளதாகும். மலம், மூத்திரம் நிரம்பிய வயிறு ஆலிலையாகும். சில காலத்திற்குப் பின் தளர்ந்துவிடும் மார்பகம் தாமரை மொக்காகும். வியர்வையும் அழுக்கும் வந்தடையும் கழுத்து கமுகு ஆகும். நாற்றமும் ஊத்தையும் நிரம்பிய வாய் தூய முருக்க மலராகும். சோறு, கறி ஆகியவற்றை கடித்து மெல்லும் பற்கள் முத்து வரிசையாகும். சளி பீள

(தொடர்ச்சி 16ம் பக்கம்)

# தில்லையே போற்றி திருமுறைகளே போற்றி!

திருப்பாவையும், திருவெம்பாவையும் தெருவெல்லாம் மலர்ந்து மணம் பரப்பும் மாதம் மார்கழி.

ஒவ்வொரு விடியல்பொழுதும், பாவையமுதத்தை பருகிக்கொண்டுதான் ஜனிக்கிறது.

ஆண்டாளின் திருப்பாவை மட்டுமல்லாது, மாணிக்கவாசகர் அளித்த திருவெம்பாவையும் இணைந்தே இந்த மாதத்தை பாவையமுதத்தைப் பருக வைக்கின்றது...

வைணவ சீலத்துக்கு ஆண்டாளின் திருப்பாவை என்றால், சைவமணம் கமழச் செய்வது மாணிக்க வாசகப்பெருமானின் 'மதுரத்திருவெம்பாவை...

மாணிக்கவாசகர் பாடிய திருவெம்பாவை மட்டுமல்லாது சைவப் பெருமை தலைத்தோங்கச் செய்த சமயக் குரவர்கள் நால்வரும், மற்றுமுள்ள சைவ மகான்களும் வழங்கிய பன்னிருத் திருமுறைகளும் உலகிற்குக் கிடைக்கப்பெற்ற மகிமை கொண்டதும் இந்தத் தில்லைப்பதிதான்.

ஆதியில் உருவான திருமுறைகள் இடையில் மறைக்கப்பட்டு, பின் இறையருளால் மீண்டும் கிடைக்கப் பெற்றது சிதம்பரத்தில்தான். அந்தத் திருமுறைகள் நமக்குக் கிடைக்க காரணமாயிருந்தவர் சிதம்பர ஆலயத்தில் நிருத்தசபையை ஒட்டிய பிராகாரத்தில் காட்சிதரும் பொல்லாப் பிள்ளையார். இவர் மறை காட்டிய விநாயகர் என்னும் பெயர் பெற்றவர்.

---

**பக்திச் செழுமைக்கும், இசைத்திறனுக்கும், தமிழ் மணத்துக்கும் கருவூலமாகத் திகழும் பன்னிருத்திருமுறைகளும் விநாயகப் பெருமானின் திருவருளின்றி நமக்குக் கிட்டி இருக்காது.**

---

இந்தத் தேவாரத் திருவாசகத் திருமுறைகளின் மூல ஏடுகள் மறைவாக சேமிக்கப்பட்டு, வாய்மொழியாகவே சிலரால் பாடப்படும் நிலை இருந்தது.

முதலாம் ராஜ ராஜசோழன் ஒருமுறை தேவாரத்தின் ஒரு சில பாடல்களைக் கேட்க நேர்ந்தது. அதைக் கேட்டதும் ஆவாமிகுந்து மற்றப் பாடல்களையும் தேடித் தருமாறு அனைவரையும் வேண்டினான்.

முடிவில் நம்பியாண்டார் நம்பி என்ற மகான் மூலம் அவன் ஆர்வம் நிறைவேறியது.

நம்பியாண்டார் நம்பி பொல்லாப் பிள்ளையாருக்கு இறைபணி செய்யும் குருக்கள். பிள்ளையார் அவரிடமே நேரில் பேசும் அளவு பக்தி மிக்கவர்.

அந்தப் பிள்ளையார்தான் நம்பியாண்டார் நம்பிக்கு தேவார, திருவாசக ஏடுகள் இருக்குமிடத்தைக் காட்டினார். அவை நடராஜப் பெருமான் ஆலயத்தினுள் அமைந்த ஓர் அறையினுள்ளே இருந்தன.

அவற்றை அரசன் வெளியே எடுக்க விரும்பி தில்லைவாழ் அந்தணரிடம் அனுமதி கேட்டான்.

அப்போது ஒரு சிக்கல்.

கண்டிப்புக்குப் புகழ்பெற்ற தீட்சிதர்கள், ராஜராஜசோழச் சக்கரவர்த்தியிடமே 'மன்னா, இந்த ஏடுகள் அனைத்தும் இவற்றை எழுதிய சமயக்குரவர்களாலேயே தில்லையம்பலவாணன் ஆலயத்தில் பாதுகாப்பாக ஒப்படைக்கப்பட்டவை. மீண்டும் அந்த நால்வர் வந்தால்தான் அவற்றை எடுக்கலாம்' என்றார்கள்.

முக்தி பெற்ற அவர்களைத் திரும்ப வரவழைக்க முடியுமா?

ஆம்; அந்த நால்வரையும் சிலைத் திருமேனிகளாக பல்லக்கில் எழுந்தருளச்செய்து தீட்சிதர்கள் முன்பாகக் கொண்டுவந்தான்.

திருமேனியில் நால்வரைத் தரிசித்த தீட்சிதர்கள், குறிப்பிட்ட அறையைத் திறந்தனர்.

அதனுள் தேவாரம், திருவாசக ஏடுகள் இருந்தன... அரசன் கண்டு வேதனையுற்றபோது—

ஓர் அசரீரி ஒலித்தது—

'இன்றைய மாந்தருக்குத் தேவையான எதுவும் அழியவில்லை! இவற்றை ஓதி உய்வீர்!' என்று.

அதுகேட்டு மன்னர் மகிழ்ந்தார். நம்பியாண்டார் நம்பியும் தேவார ஏடுகளைப் பரிசீலித்து முறைப்படுத்தி நமக்களித்தார்.

மாணிக்கவாசகர் அருளிய திருவெம்பாவையை ஓதும்போதும், பன்னிராயிரம் திருமுறைகளைப் பாடும்போதும்—

ஆருத்ரா திருநாளில் தன் ஆடல் காட்டி அருள் தரும் அம்பலவாணன் எழுந்தருளியிருக்கும் அந்தப் பொன்னம்பலபுரியான தில்லையையும் நினைத்து தொழுவோம்.

பிரபஞ்சத்தை தன் அருளால் இயக்கும் நடராஜப் பெருமான் நான்மறைகளின் சாரமான பன்னிரு திருமுறைகளையும் நமக்குக் காத்துத் தந்த நற்றவத் தலமல்லவோ, அது!

தில்லையே போற்றி! திருமுறைகளே போற்றி போற்றி!

---

அவரவர் தமக்குக் கொடுக்கப்பட்ட பொறுப்புகளை ஒழுங்காக ஏற்று செய்து வந்தால், உலகத்தில் குழப்பம் இல்லாமல் இருக்கும். அவரவர் வழியிலேயே அவர்கள் திறமையும், உயர்வும் பெறலாம்.

---

பனிரெண்டு இராசிக்காரர்களுக்கு

# வியாழ மாற்றத்தின் பலாபலன்கள்

## மேடம்

அச்சுவினி, பரணி கார்த்திகை முதற்கால் அமைந்த மேட இராசிக்காரர்களுக்கு இதுவரை மூன்றாம் இடத்தில் இருந்த வியாழபகவான் 4ம் வீடான கர்க்கடகத்திற்கு செல்வது ஓரளவு கஷ்ட பலன்களை குறைத்து மனதிற்கு நிம்மதியைத் தரக்கூடியதாக அமையும். மருத்துவச் செலவும் வெளியூர் பயணமும் உண்டாகும். மனைவி மக்கள் மூலம் மகிழ்ச்சி நிலவும். கையெழுத்து, ஒப்பந்தம் போடுவதில் அவதானம் தேவை. சங்கடத்தில் மாட்டுவதற்கு சனி பார்வையுண்டு. உடல் நிலையில் அடிக்கடி அவதானமாக இருக்கவும். விவசாயிகள், வியாபாரிகள் கணிசமான அளவு ஆதாயம் பெறுவர். மாணவர்களுக்கு மேற்படிப்பு வசதியுண்டு. பெண்களுக்கு திருமணப்பலிதம் ஏற்படும்.

தில்லை

## இடபம்

கார்த்திகை பின்முக்கால், ரோகினி மிருகசீரிடத்து முன்னரை. இவர்களுக்கு இதுவரை இரண்டாம் வீட்டில் இருந்து நற்பலன் காட்டிய குருவானவர் மூன்றாம் இடத்திற்கு வருவதால் உறவினர் நண்பர்களிடையே விரோதம் பணத்தட்டுப்பாடு, தலைக்குமேல் போகும். பொருள் வரவில் தடை ஏற்படும். அட்டமச்சனி முடிந்துள்ளதால் பயப்படத்தேவையில்லை. வீண்கெட்ட பெயரும், மேலதிகாரிகளின் ஆதரவும் குறைவுபடும். வெளியூர் பிரயாணங்கள், வேளைக்கு உணவு உண்ண முடியாத நிலை, தொழிலில் மாற்றம் என்பன உண்டு. விவசாயிகளும் வியாபாரிகளும் முதலீட்டை குறைத்துக் கொள்வது நன்று. கணவன்—மனைவி உறவு நன்று மாணவர்கள் முயற்சி எடுத்தல் அவசியம்.

## மிதுனம்

மிருகசீரிடத்துப் பின்னரை, திருவாதிரை, புனர்பூசத்து முன்முக்கால் நட்சேத்திரம் கொண்ட மிதுனம் இராசிக்காரர்களுக்கு இதுவரை ஜென்மத்தில் இருந்து ஆட்டிப்படைத்த வியாழபகவான் 2ம் வீட்டிற்கு வருவது இனிய சூழ்நிலை பகைவர்களை வெல்லுதல் பணம் ஆபரணம் சேர்க்கை காணி பூமி வாங்கல், பதவி உயர்வு இராஜ மரியாதை என்பவைகளை கொடுப்பார். அட்டமச்சனி காலமாதலால் எதிலும் விழிப்புடனும் அவதானத்துடனும் நடந்துகொள்வது மிக நன்று மாணவர்களுக்கு கல்வி உயர்வும் விவசாயிகள், வியாபாரிகள், ஆதாயம் அடைவர் பெண்களுக்கு மிகவும் சிறப்பைத் தரும்.

## கர்க்கடகம்

புனர்பூசத்து நாலாங்கால், பூசம், ஆயிலியம் கொண்ட கர்க்கடக இராசிக்காரர்களுக்கு ஜென்மத்திற்கு வியாழ பகவான் வந்தாலும்கூட உச்சம் பெறும்இடத்திற்கு வருவதால் பலவித நன்மைகளைத் தரக் கூடியதாக இருக்கும். விரோதிகள் பணிவர். குடும்பத்தில் சந்தோஷம் நிலவும். இதுவரை பிடித்திருந்த நோய் அகலும், புகழ் அதிகரிக்கும். செய்தொழில் விருத்தி திடீர் அதிர்ஷ்டம் உண்டு. மாணவருக்கு உயர்வும், விவசாயிகள் வியாபாரிகளுக்கு நன்மையுண்டு. திருமணமாகாத பெண்களுக்கு திருமணப் பலிதம் உண்டு.

## சிங்கம்

மகம், பூரம் உத்தரத்து முதற்கால் நட்சேத்திரக்காரர்களுக்கு குருபகவான் 12ம் வீட்டிற்கு வருவது மங்களமான காரியங்களுக்காக தேவையான கருமங்களை உத்தேசித்து செலவுகள் ஏற்படும். கணவன் மனைவி உறவு நன்றாக அமையும். குடும்பத்தில் புதிய ஜீவன் உருவாகும். சனி பார்வை நன்றாக உள்ளதால் தீமை ஏற்படாது. மாணவர்களுக்கு கல்வி பாதிப்பு இல்லை. பெண்களுக்கு மனக் கவலை தீர்ந்து மகிழ்ச்சி நிலவும். விவசாயிகள், வியாபாரிகள் கூடுதல் முதலீட்டைத் தவிர்த்து நடந்து கொள்வது நன்று.

## கன்னி

உத்தரத்து பின்முக்கால், அத்தம், சித்திரையின் பின்னரை கொண்ட கன்னி இராசிக்காரர்களுக்கு 11ம் வீட்டிற்கு வியாழன் வருவது மிகவும் மேன்மை தரக்கூடியதாகும். குடும்பத்தில் சந்தோஷம் நிலவும் செல்வாக்கு, கௌரவம், புகழ் மேலோங்கும். செய்தொழிலில் விருத்தி திடீர் அதிர்ஸ்டம் என்பன ஏற்படும். மாணவருக்குச் சிறப்பான காலமாக அமைவு பெறும். பெண்களுக்கு தாம் விரும்பிய மணாளன் கிடைப்பதோடு விவசாயிகளும் வியாபாரிகளும் கூடுதல் முதலிடவும் ஆதாயம் கிடைக்கவும் வழியுண்டு.

## துலாம்

சித்திரையிற் பின்னரை சுவாதி, விசாகத்து முன்முக்கால் அமைந்த துலாம் இராசிக்காரர்களுக்கு இதுவரை 9ம் வீட்டில் இருந்த வியாழபகவான் 10ம் வீட்டிற்கு வருவது இதுவரை செய்து வந்த தொழிலில் தேக்கமும் நட்டமும் ஏற்பட வாய்ப்பு உண்டு. அவதானம் தேவை. உயர்ந்த பதவிகளில்

(தொடர்ச்சி 12ம் பக்கம்)

அன்னை மஹேஸ்வரியின் சந்தேகம்

# ஏற்படுத்திய அதிசயம்

கைலாயத்தில் ஒரு தினம் பார்வதிதேவியும் பரமேஸ்வரனும் தனித்திருந்தார்கள். அவ்வமயம் பார்வதியின் உள்ளத்தில் ஒரு சந்தேகம் எழுகிறது. 'எல்லாம் வல்லவராகிய உமக்கு சகல ரூபம் எதற்கு என்று கேட்கின்றாள் அன்னை பார்வதி.

சிருஷ்டி, திதி, சங்காரம், திரோபவம், அனுக்கிரகம் என்னும் ஐந்தொழிலுக்காகவே இவ்வுருக்கொண்டிருக்கிறோம் என்று சொல்லிவிட்டு அத்துடன் நிறுத்தாது, என் கண் திறக்கும்போது உலகம் தோன்றும், விழித்திருக்கும்போது வாழும், மூடுங் காலத்து அழியும் என்று அருள் திறத்தை மேலும் விளக்கினார் இறைவனார்.

கா. சின்னையா

இதைக்கேட்ட அன்னை பெண்மைக்குரிய சந்தேகத்தோடு இறைவனைப் பரீட்சித்துப் பார்க்கத் துணிகிறாள். இறைவன் பின்புறமாக வந்து அவரது கண்கள் இரண்டையும் ஏதோ விளையாட்டாகத் தன் கைகளால் பொத்துகிறாள். அவ்வளவுதான், மூவுலகங்களும் இருளில் புதைந்துவிடுகிறது. உயிர்கள் யாவும் வாடி வதங்கிவிடுகின்றன. அண்ணலும் அம்மையைக் கடிந்து அவள் தன் கைகளை விலக்குகின்றார்

இப்படியொரு உற்பாதத்தை ஏற்படுத்தியதற்காக பார்வதிதேவியை கரிய உருவமுடைய காளியாகக் கடவாய், என்று சபித்து விடுகிறார். அம்மை 'அறியாது செய்த பிழையை மன்னிக்க வேண்டும்' என இறைவன் காலடியில் வீழ்ந்து கதற 'சரி சண்டாசுரனை வென்றபின் காளி உருவம் நீங்கி திரும்பவும் என்னை வந்து சேர்வாய்' என அனுக்கிரகிக்கிறார் இறைவன்.

அம்மையும் அவரது ஆணைப்படியே காளியாகிறாள். காளப்பேருரை அடுத்த மருதவனத்தில் துர்க்கை வடிவில் கோயில் கொள்கிறாள். இந்தச் சமயத்தில் பெருவரங்கள் பலபெற்ற சண்டாசுரன் தேவர்களை வருத்த தேவர்கள் அம்மையிடம் முறையிட, அம்மையும் சண்டாசுரனோடு போர் புரிந்து அவனைக் கொல்கிறாள். தேவர்களும் பூமழை பொழிந்து தேவியை வாழ்த்துகிறார்கள். தேவியின் சாபமும் நீங்குகிறது.

எவன் பிறரது நற்செயல்களை கண்டு மகிழ்ச்சி கொள்வதில்லையோ அவனால் எந்த நற்காரியத்தையும் செய்யமுடியாது.

— மார்க்ஸ் என்டனி

# மகாகவி பாரதி பாடிய

## தமிழ்

யாமறிந்த மொழிகளிலே தமிழ்மொழிபோல்
இனிதாவது எங்கும் காணோம்;
பாமரராய், விலங்குகளாய், உலகனைத்தும்
இகழ்ச்சிசொலப் பான்மை கெட்டு,
நாமமது தமிழரெனக் கொண்டுஇங்கு
வாழ்ந்திடுதல் நன்றோ? சொல்லீர்;
தேமதுரத் தமிழோசை உலகமெலாம்
பரவும்வகை செய்தல் வேண்டும்.

யாமறிந்த புலவரிலே கம்பனைப்போல்,
வள்ளுவர்போல், இளங்கோ வைப்போல்,
பூமிதனில் யாங்கணுமே பிறந்ததில்லை;
உண்மை, வெறும் புகழ்ச்சியில்லை;
ஊமையராய்ச் செவிடர்களாய்க் குருடர்களாய்
வாழ்கின்றோம்; ஒருசொற் கேளீர்!
சேமமுற வேண்டுமெனில் தெருவெல்லாம்
தமிழ்முழக்கம் செழிக்கச் செய்வீர்!

பிறநாட்டு நல்லறிஞர் சாத்திரங்கள்
தமிழ்மொழியிற் பெயர்த்தல் வேண்டும்;
இறவாத புகழுடைய புதுநூல்கள்
தமிழ்மொழியில் இயற்றல் வேண்டும்;
மறைவாக நமக்குள்ளே பழங்கதைகள்
சொல்வதிலோர் மகிமை இல்லை;
திறமான புலமையெனில் வெளிநாட்டோர்
அதைவணக்கஞ் செய்தல் வேண்டும்.

உள்ளத்தில் உண்மையொளி யுண்டாயின்
வாக்கினிலே ஒளியுண் டாகும்;
வெள்ளத்தின் பெருக்கைப்போல் கலைப்பெருக்கும்
கவிப்பெருக்கும் மேவு மாயின்
பள்ளத்தில் வீழ்ந்திருக்கும் குருடரெல்லாம்
விழிபெற்றுப் பதவி கொள்வார்;
தெள்ளுற்ற தமிழமுதின் சுவைகண்டார்
இங்கமரர் சிறப்புக் கண்டார்.

# இந்து கலைக் களஞ்சியம்

பேராசிரியர் கலாநிதி பொ. பூலோகசிங்கத்தை ஆசிரியராகக் கொண்டு உருவாக்கப்பட்ட முதலாவது இந்து கலைக் களஞ்சியம் 12-8-1990 ஞாயிற்றுக் கிழமை இந்து சமய, இந்து கலாசார அலுவல்கள் இராஜாங்க அமைச்சர் திரு. பி. பி. தேவராஜ் அவர்களால் வைபவரீதியாக வெளியிடப்பட்டது.

தமிழ் உயிர் எழுத்துக்களான 'அ — ஈ' வரையிலான, முதல் நான்கு எழுத்துக்களினாலானதுமான 270 பதங்களைக் கொண்ட இந்நூல், 236 பக்கங்களைக் கொண்டது. நூலின் விலை ரூபா 250.00 ஆகும்.

1982ம் ஆண்டு, முன்னை நாள் இந்து சமய இந்து கலாசார அமைச்சராகப் பதவி வகித்தவரும் தற்போதைய இலங்கைக்கான மலேசிய தூதுவருமான திரு. செல்லையா இராசதுரை அவர்களால் வித்திடப்பட்ட இந்நூல், 1988ம் ஆண்டு அச்சுக்குச் சென்று தற்போது அமைச்சர் திரு. பி. பி. தேவராஜ் அவர்களால் மலராக மணம் பரப்புகின்றது.

---

பன்னிரெண்டு இராசிக் . . .

(10ம் பக்க தொடர்ச்சி)

உள்ளவர்கள், அவதானத்துடன் நடந்துகொள்வது நன்று. திடீர் நோய்கள் ஏற்படவும் இடமாற்றம், வீடுமாற்றம் என்பவைகள் தோன்றவும் வழி சமைக்கும். பெண்களுக்கு அடிக்கடி தோல்விகள் ஏற்படும். மனத் தைரியம் தேவை. விவசாயிகளும் வியாபாரிகளும் கூடுதல் முதலீட்டை தவிர்க்கவும். மாணவருக்கு சுமாரான காலம்.

**விருட்சிகம்**

விசாகத்து நாலாங்கால் அனுஷம், கேட்டை, அமைந்த விருட்சிக இராசிக்காரர்களுக்கு 9ம் வீடான இலட்சுமி கரத்தில் குரு வருவதால் நினைத்த காரியங்கள் அனைத்தும் தங்குதடையின்றி நிறைவேறும். எடுத்த கருமங்கள் வெற்றியுடன் முடிவுறும். பதவி உயர்வும் பிரயாணங்களில் அனுகூலமும் ஆதாயமும் கிடைக்கும். குடும்பத்தில் மகிழ்ச்சி புதிய ஜீவன் உதயம், என்பன உண்டு. மணமாகாதவர்களுக்கு திருமணப் பலிதமும், கடன் தொல்லைகள் திருவதுடன் விவசாயிகளும், வியாபாரிகளும் கூடுதல் நன்மையும் ஆதாயமும் பெறுவர். பொருள் சேர்க்கையுண்டு. ஏழரைச்சனி முடிவுற்றதால் நிம்மதியான வாழ்க்கை தொடரும். மாணவருக்கு சிறப்பான கல்விமேன்மையுண்டு.

**தனு**

மூலம், பூராடம், உத்தராடத்து முதற்கால் நட்சேத்திரம் தனு இராசிக்காரர்களுக்கு குருபகவான் அட்டமத்திற்கு வந்தாலும், உச்சம் பெற்று பார்வையுள்ளதால் அதிகளவு தீமையில்லை. எதிர்பாரா செலவினங்கள் தீய எண்ணங்கள், தீ விபத்துக்கள் ஏற்பட இடமளிக்கும். ஏழரைச்சனியும் ஜென்மத்தில் சனி இருப்பதால் எந்த விடயத்திலும் அவதானத்துடன் நடந்துகொள்வது நன்று. கணவன்—மனைவி உறவுகூட விரிசலடையும். உறவினர் நண்பர் விரோதிப்பர். பணக் கஷ்டம், பொருளாதார இழப்பு என்பவைகளைக் காட்டும். விவசாயிகள், வியாபாரிகள் கூடுதல் முதலீட்டைத் தவிர்க்கவும். மாணவர்கள் அதிக அக்கறையுடன் செயற்பட்டால் திறமை காணலாம்.

**மகரம்**

உத்தராடத்து பின்முக்கால் திருவோணம் அவிட்டத்து முன்னரை அமைந்த மகர இராசிக்காரர்கள் இந்த வியாழ மாற்றத்தினால் ஒரு யோககாரர்களாக அமைவர். இதுவரை இருந்த கஷ்டங்கள் நீங்கி வீடு வாங்குதல் மனை மாற்றம், காரியானுகூலம், பதவியுயர்வு, வெளிநாட்டுப் பயணம் என்பவைகளைப் பெறுவர். திருமணமாகாதப் பெண்களுக்கு திருமணப் பலிதமும், கணவன்—மனைவி உறவில் கூடிய அன்பு, விவசாயிகள், வியாபாரிகள் கூடுதல் ஆதாயம், திடீர் அதிஸ்டம் பெறுவர். மாணவர்களுக்கும் சிறப்பைத் தருங்காலமாக அமையும்.

**கும்பம்**

அவிட்டத்து பின்னரை சதயம், பூரட்டாதி முன் முக்கால் கும்பராசிக்காரர்களுக்கு 6ம் வீட்டிற்கு வியாழ பகவான் வருவதும், ஏழரைச்சனி முற்கூறு நடப்பதும் தொல்லைகள் மனக்கவலை எப்போதும் வாட்டிவரும். செய்தொழில் வீழ்ச்சி, பொருள் நட்டமுண்டு. கணவன் மனைவியிடையே பிரச்சனை பிரிவினை தோன்றி மறையும். விட்டுக்கொடுத்து பொறுமையுடன் வாழ்வது நன்று. விவசாயிகளும் வியாபாரிகளும் கூடுதல் முதலீட்டைத் தவிர்ப்பது நல்லது. மாணவர்கள் கூடிய சிரத்தை எடுக்க வேண்டும். பெண்களுக்கு சுமாரான பலன் காட்டும்.

**மீனம்**

பூரட்டாதி நாலாங்கால், உத்திரட்டாதி, ரேவதி நட்சேத்திர மீன இராசிக்காரர்கள் 6ம் வீட்டிற்கு வரும் குருவின் பார்வையால் கூடிய நன்மை பெறுவர். பதவியுயர்வுடன், இடமாற்றம், புதிய மனை மாற்றம் இதுவரை பட்ட துன்பங்களுக்கு விடிவு ஏற்படல், புதிய ஸ்தானம் கிடைத்தல், வெளியூர் பயணம், பிள்ளைகளால் மகிழ்ச்சி, கணவன் மனைவி உறவில் கூடிய அன்பு புத்திர பாக்கியம், இதுவரை இருந்துவந்த நோய் நீங்கல். விவசாயிகள் வியாபாரிகள் கூடுதல் நன்மையடைதல். திடீர் அதிஸ்டம் சிலருக்குக் கிடைத்தல் மாணவருக்கு உயர்கல்விபேறு திருமணமாகாத பெண்களுக்கு தாம் விரும்பிய கணவர் கிடைத்தல் மகிழ்ச்சியுண்டாம்.

எனவே இந்த வியாழமாற்றம் மிதுனம், கர்க்கடகம், கன்னி, விருட்சிகம், மகரம், மீனம் இராசிக்காரர்களுக்கு சிறந்த பலனையும், மேடம், இடபம், சிங்கம், துலாம், தனு, கும்பம் ஆகிய இராசிகாரர்களுக்கு மத்திம, சில தீய பலன்களையும் 1990ம் ஆண்டு ஆடி 15ந் திகதியிலிருந்து 1991ம் ஆண்டு ஆனி 28ந் திகதிவரை இது ஏற்படுத்த இடமுண்டு. நற்பலன் குறைந்தவர்களும், நற்பலன் கொண்டவர்களும் வியாழ பகவானுக்கு அர்ச்சனை செய்து வியாழக்கிழமை தோறும் விரதமிருந்து அவரைப் பூசித்துவர தொல்லைகள் அகன்று சுபீட்ச வாழ்வு பெற அவர் அனுக்கிரகம் கிடைக்குமென்பது சோதிட விதி. மகாதெசை, தெசாபுத்தி சிறப்பாக உள்ளவர்களுக்கு அவருடைய தீய பலன்கள் குறைவாகவே தென்படும். விரதம் அனுட்டிப்பது அவசியம்.

## சனிஸ்வரனின் குண இயல்பும் அவரது மாற்றப் பலன்களும்

(சென்ற இதழ் தொடர்ச்சி)

உடனே தந்தையாகிய துஷ்டா மகளைப் பார்த்து கற்புடைய பெண்கள் இத்தகைய காரியம் செய்ய மாட்டார்கள். என்னதான் இருந்தாலும் கணவனை விட்டுப் பிரியலாமா என்று கோபித்தான். சம்ஞா தான் செய்தது தவறு எனக்கருதி, வருந்தி இனி திருப்பிக் கணவன் வீட்டிற்குச் சென்றால், அவர் நம்மைக் கோபிக்கக்கூடும் என எண்ணி அருமையான தவங்கள் செய்வதற்கான வடதுருவத்துக்குச் சென்றாள். அங்கு சூரியனையே மனத்தால் தியானித்து கடுந்தவம் செய்தாள்.

''சாயாதேவி எனும் நிழல் சூரியனுடன் குடும்பம் நடத்தி சாவர்ணி எனும் எட்டாவது மனுவையும் சனி பகவானையும் பெற்றாள். தனக்குப் பிள்ளைகள் பிறக்கும் வரையில் சம்ஜையின் பிள்ளைகளை சீரும் சிறப்புமாக வளர்த்த இவள் தன் பிள்ளைகளைக் கண்டதும் அவர்களை ஏறுமாறாக நடத்தினாள். இதைப் பொறுக்காத யமன் சாயாதேவியை உதைக்க காலைத் தூக்கினான். இதைக் கண்ட சாயாதேவி கொடுத்த சாபத்தால் கால் புழுத்து முடமாகிய போது சூரியனின் அனுக்கிரகத்தால் கால் சுகமாகி நலம் பெற்றான். பெற்ற தாயானவள் பிள்ளைக்கு சாபம் கொடுப்பது அரிது, என எண்ணி சூரியன் சாயாதேவியிடம் சென்று நடந்தவைகளைக் கேட்டான். ஒன்றும் விடாமல் உண்மைகளைக் கூறிய சாயாதேவி மன்னிப்புக் கேட்டுக்கொண்டாள். எல்லாவற்றையும் அறிந்துகொண்டு வஸ்டா வீட்டிற்கு சென்று சூரியன் தனது மாமனிடம் சம்ருதேவியைப் பற்றி கேட்டபோது வடதுருவத்தில் உன்னுடைய ஒளியைப் பொறுக்க மாட்டாதவளாய் பொன்குதிரையாகி தவம் செய்கிறாள். நீ அங்கு செல்வதென்லால் உன் உடலிலுள்ள வெப்பத்தை தனித்துச் செல்லல் வேண்டும் எனக்கூறினார். சூரியன் அங்கு சென்று தன் மனைவியின் தனிச்சிறப்பைக் கண்டு அவருடைய அருமையான தவத்திற்கு மெச்சினார். தான் ஆண் குதிரையாகி அவளை அணுகினான். சம்ஞாதேவி பயந்து ஓடினாள். இவனும் விடாமல் துரத்தினான். ஆண் குதிரையாக துரத்திச் சென்ற சூரியனுடைய ஆற்றல் மூக்கின் வழியாக சிதறியது. அப்போது தேவ மருத்துவர்களாகிய அசுவினி தேவர்களிருவரும் பிறந்தனர்.

சூரியன் ஏதோ குதிரையென்று ஓடுகிறான் என்பதையறிந்து தனது உண்மை வடிவைக் காட்டினான் சம்ஞாதேவியும் குதிரை வடிவிலிருந்து உண்மை வடிவிற்கு வந்து சூரியனிடம் சரணடைந்தாள். சூரியன் அவளைக் கூட்டிக்கொண்டு தன் மண்டபத்திற்கு வந்து இரு மனைவியாருடனும் இல்லறம் நடத்தினான். தன் மக்களில் வைவஸ்தமனுவை மன்னனாகவும் யமனைக் காலனாகவும் யமுனையை நதியாக உலகிற்கு உதவுமாறு பணித்து சனியைக் கோள்களுள் ஒருவனாக இருந்து மக்களுடைய புண்ணிய பாவங்களுக்கு ஏற்ப நியதிப்படி இன்ப துன்பங்களை உதவி வருக என்று ஏவினான். சனிபகவான் காசிக்குச் சென்று விசுவலிங்கத்தின் தென்பால் ஒரு சிவலிங்கத்தை தாபித்து வழிபட்டு தனக்கு கொடுத்த பதவிக்கு வேண்டிய தவவலிமையை பெற்று இப்போதும் வாழ்ந்து வருகின்றான் என்று புராண வரலாறுகள் கூறுகின்றன.

சனிபகவானுக்கு மந்தன் சனைச்சரன் பங்கு கரியன் என்ற பெயர்களும் உண்டு. ஏனைய கோள்களைக் காட்டிலும் சனிக்கோள் இருபத்தொன்பதரை ஆண்டிற்கு ஒருமுறை இராசி மண்டலங்களைக் கடப்பதால் மந்தன் சனைச்சரன் என்ற பெயர்கள் உண்டாயின. இவை பொதுவாக சஞ்சரிப்பதால் ஏற்பட்டன எனக்கூறுவர். இவருடைய மூத்த தாயின் மகன் யமன் மாற்றாந்தாயின்மேல் கொண்ட சீற்றத்தினால் சனிக்கு காலில் அடித்ததால் நொண்டியானான் என்றும் இராவணன் கோபத்தினால் காலைத் துண்டித்தான் என்ற வரலாறுகளும் சொல்லப்படுகின்றன. இதனால் உண்டான பெயர் பங்கு என்பதாகும்.

**எஸ். தெய்வநாயகம்**

நீலநிறமான கொடிகளால் அலங்கரிக்கப்பட்டதும் எட்டுக் கருங்கழுகுகள் பூட்டியதும் நீலமணியிழைக்கப்பட்டதுமான தேரில் மேருவை வலம் வருபவனாக வியாழன் யமன் இவர்களுடன் கூடவருபவராக இவர் இருக்கின்றார் என்று சோதிட நூல்கள் கூறுகின்றன. இந்திர நீலக்கல் இவரது நிறம் எனவும் கையில் சுத்தி விரதம் கொண்டு கழுகு வாகனத்தில் வீரமுடன் வருவதாக ஒரு ஆகமம் கூறுகின்றது. சில ஆகமங்கள் காகம்தான் இவரது வாகனம் எனச் சொல்லுகின்றன. சனிக்கிழமை இவருக்குரிய நாளில் எள்ளின் நெய்யை விளக்கிட்டு நிவேதித்தால் இவர் கருணையைப் பெற முடியும். வியாழனுக்கு அடுத்தபடியாக பெரிய கிரகம் சனி. பூமிக்கும் சனிக்கிரகத்திற்குமுள்ள இடைத்தூரம் 75 கோடி மைல்களாகும். இது தன்னைத்தானே ஒருமுறை சுற்றிவர பத்துமணி பதினான்கு நிமிடங்கள் ஆகின்றன. சனியின் ஒருநாள் 10-1/2 மணி நேரமாகும். இது சூரியனை ஒருமுறை சுற்றிவர 29-1/2 ஆண்டுகள் செல்கின்றன. எனவே பூமியில் 29-1/2 ஆண்டுகள் கழிந்தால் சனிக்கு ஓராண்டுதான் ஆகும். இப்படியாக இராசிக்கு 2-1/2 ஆண்டுகளாகப் பனிரெண்டு இராசிக்கும் சுமார் முப்பதாண்டுகள் ஆகின்றன என்று ஞானிகள் கூறுகின்றனர்.

சனிபகவானைத் திருப்திப் படுத்தவேண்டுமானால் பிரமனுக்கு வழிபாடு செய்தால் சனிபகவான் மகிழ்வார். ஆதலால் சனிக்கு அதிதேவதை பிரஜாபதியாகிய பிரமன், அடுத்து யமனை வழிபட்டாலும் சனி மகிழ்ந்து கருணை புரிவார். இவர்கள் இருவரையும் வழிபட்டால் சனிக்கு மகிழ்ச்சி உண்டாகும். தன்னையையே பூசித்ததுபோலக் கருதி எல்லா நன்மைகளையும் செய்வார்.

# இனியது! இனியது!!

உதயசூரியன் ஓயுதல் இன்றி
ஒளிக்கதிர்களைப் பரப்பி எழுந்தனன்
எதையும் வெல்லும் இதயம் வாழ்த்த
இன்னொரு பொழுது இனிதே புலர்ந்தது

பறவைகள் மகிழ்வின் பாவை இசைத்தன
பனித்துளி ஆங்கே பயந்து மறைந்தது.
நறுமணம் சூழ்ந்தது நன்மலர்ப் பொலிவால்
நல்லன நிறையும் நம்பிக்கை எழுந்தது.

இயக்கம் எனது கடமை என்றே
உறங்க மறந்த கடல்கள் ஆர்த்தன்
தயக்கம் வேண்டா, தளர்தல் வேண்டாம்
துணிவுடன் எழுக என்றன அலைகள்

படைத்தவன் முன்னே பாமரன் போலே
பயந்து நாணிய மின்மினிப் பூச்சிகள்
பகலவன் வரவால் பெருமை இழந்தன
பண்புளோர் முன்னால் பகட்டுகள் ஏன்தான்?

நெருப்புக் கோளம் ஏந்திய வானம்
நிர்மலமாக நீண்டு விரிந்தது
வெறுப்புக் கோலம் மறுக்கும் உள்ளம்
உண்மை ஒளியோடு விரியும் என்றதோ?

ஆறுகள் கிதைக்கு அர்த்தம் உரைத்தன
ஆற்றுக அவரவர் கடமையை என்றன
ஊறுகள் விளைவது ஒன்றே ஒன்றால்
ஒவ்வொரு மனிதனின் மனத்தால் என்றே!

உயர்ந்த உண்மையை இயற்கை சொன்னது
உணராதின்னும் இருப்பதனாற் தான்
கயமை மிகுந்தது; கவலை மிகுந்தது
கரங்கள் களிப்புடன் இணைதல் மறுத்தன!

போதும் இந்தப் போலித் தளங்கள்
பொய்ம்மைக்குத் துணை போனதும் போதும்
வாதம், வாட்டு வேதாந்தங்க ளாலே
வாழ்வு நரகமாய் வரண்டதும் போதும்

இனியது என்றும்; உலகம் இனியது
இனியது இயற்கை அழகுகள் என்ற
இனிய நினைவை எண்ணுவ தாலே
இதயங் களெல்லாம் இன்பமாய் வாழும்

மனத்தினுள்ளே மனத்தை வாழ்த்தி
மதத்தினுள்ளே மனத்தை ஆழ்த்தி
இனத்தால் ஒன்றே மானுடம் என்ற
ஒருமை உணர்வொடு இழிந்தன வீழ்த்தினால்

நாளையப் பொழுதும் நல்லதாய்ப் புலரும்
நாளையப் பொழுதும் நமக்கெனப் புலரும்
ஊழையும் வெல்லும் வலிமைகள் ஓங்கும்
அன்பும் பண்பும் உலகினைத் தாங்கும்.

பண்டாரவளை அன்புச்செல்வன்

வியாழ சுகமும்...

(7ம் பக்க தொடர்ச்சி)

டாலும் சோதிடத்துறையில் வியாழபகவானின் மாற்றத்தை நாம் உன்னிப்பாக நோக்குவது மிகவும் அவசியமாகும்.

இவரது மாற்றத்தினால், நமது நாட்டிற்கு விமோசனம், நிம்மதி ஏற்படுமா? அல்லது அழிவுகள் தொடருமா. அண்டை நாடுகளில் எப்படியான சூழ்நிலை தென்படும்? பனிரெண்டு இராசிகாரர்களின் வாழ்வில் எத்தகைய மாற்றங்களை இவர் ஏற்படுத்துவார் என்பதைப்பற்றி நோக்குவோம்.

## இலங்கை நாட்டின் நிலை

நமது இலங்கை நாடு கும்பராசியில் சேர்ந்து இதுவரை 5ம் வீட்டில் இருந்து நன்மை பார்வையில் செயல்பட்ட வியாழபகவான் தனது உச்ச வீடான கர்க்கடக இராசியில் 6ம் வீட்டிற்கு செல்வது நன்மை தீமை இரண்டும் கலந்த ஒரு நிலையை தரக்கூடியதாகும். புரட்டாதி மாதம் 14ம் திகதிவரை நாட்டில் ஒரு நிம்மதியற்ற தன்மை. பயம், பீதி என்பன மக்களிடையே தோன்றுவதோடு அடிக்கடி பிரச்சனைகள் தோன்றி மறையும். சமாதானப் பேச்சுக்கள் தொடர்ந்தாலும் பூரண திருப்தியளிக்கக்கூடியதாக அமையாது. சனிபகவானின் பார்வையும், பலவித கலக்கத்தை ஏற்படுத்தக்கூடியதாக அமையும். புரட்டாதியின் பின்பு ஒருவித நிம்மதி மக்களிடையே ஏற்படும். சமாதானநிலை தோன்றுவதோடு, அரசியலில் ஒரு திருப்புமுனையை ஏற்படுத்தும். தமிழ் மக்களின் நியாயபூர்வமான உண்மை நிலையை எல்லா நாடுகளும் வலியுறுத்தும் தன்மை ஏற்படுவதோடு அரசும் இதையுணர்ந்து செயற்படக்கூடிய நிலைக்கு ஆளாகும். முக்கிய அரசியல் தலைவர் ஒருவர் நோய்வாய்ப்பட அல்லது மரணமடைய ஏதுவுண்டு. பாரிய தாக்கங்களை இலங்கைக்கு வியாழபகவான் ஏற்படுத்தாவிட்டாலுங்கூட செயவுத் தானங்களைக் கூட்டி வெள்ளம், பஞ்சரிவு போன்ற தாக்கங்களையும் கொடுக்கும் தன்மைக்கு ஆளாக்குவார். அரசியல் தலைவர்களும், மக்களும் நிதானத்துடனும், புத்தி சாதுரியத்துடனும் நடந்து கொண்டால் பலவதத் தாக்கங்களை இலங்கையில் ஏற்படாமல் தவிர்க்க வழியுண்டு.

ஒரு குழந்தை உண்மையே பேச வேண்டுமென்றால் மற்றவர்கள் உண்மை பேசுவதை கேட்டுப் பழக்கப்பட்டிருக்க வேண்டும். உதாரணமாக; தனது பெற்றோர்களும், மற்றவர்களும் பொய் பேசுவதையே கேட்டுப் பழக்கப்பட்டு போன ஒரு குழந்தையினால் உண்மையே பேச முடியாது.

— ஆல்டர்ட் சுவைட்சா

ஜீரண சக்தி

# ஆயுள் விருத்தி

நீங்கள் இரவிலாகிலும் பகலிலாகிலும், சாப்பிட்டுப் படுக்கும்போதாகிலும் இடதுகைப்புறமாய் ஒஞ்சரித்துப் படுக்கவேண்டும். ஏனென்றால் நமது தினிப்பை வயிற்றின் இடதுகைப்புறமாக இருப்பதால் இடதுபக்கம் ஒஞ்சரித்துப் படுக்கவேண்டும். அவ்வாறு படுப்பதினால் சாப்பிட்ட ஆகாரமெல்லாம் சரியாய் ஜீரணமாகி வயிற்றிற்கு யாதொரு சங்கடமுமில்லாமல் இருப்பதுமேயன்றி சுவாசம் வலது நாசியில் ஓடிக்கொண்டிருக்கும். அதனால் ஆயுள் விருத்தியாகும். இதற்குக் காரணம் யாதெனில், வலது நாசியில் வரும் சுவாசம் (மூச்சு) 8 அங்குலமும், இடது நாசியில் வரும் சுவாசம் (மூச்சு) 12 அங்குலமும் வெளியில் வரும். வலது நாசியில் 8 அங்குலம் சுவாசம் வெளிவருவதனால் ஒவ்வொரு சுவாசத்திலும் 4 அங்குல சுவாசம் கூடி வருகின்றது. அதனால் ஆயுள் விருத்தியாகும். இடதுபுறமாய் ஒஞ்சரித்துப் படுப்பதனால் ஜீரண சக்தியும் . ஆயுள் விருத்தியும் உண்டாகும்.

கா. சின்னையா

போஜனமுண்டு வலதுகைப்புறமாக ஒஞ்சரித்துப் படுத்தால், இடதுகைப்புறமாக இருக்கும் தினிப்பை வலதுகைப்புறமாகப் புரளும். அப்படி புரளுவதனால் சாப்பிட்ட ஆஹாரம் சரியாய் ஜீரணமாகாமல் கெடுதியை உண்டாக்கும். அன்றியும் 12 அங்குல நீளம் இடது நாசியில் ஓடும். அதனால் ஆயுள் க்ஷீணமாகும். போஜனமுண்டு வலதுகைப்புறமாய்ப் படுப்பதி நிமித்தம் இவ்விரண்டு நஷ்டமுண்டாகும். ஆதலால் நீங்கள் சாப்பிட்டுப் படுக்கும்போது இடதுகைப்புறமாய்ப் படுத்தால் ஜீரண சக்தியும் ஆயுள் விருத்தியும் உண்டாகும் என்று இதனால் அறிந்து நீங்கள் எல்லோரும் இரவிலாகிலும் பகலிலாகிலும் போஜனம் உண்டு படுத்தாலும் அல்லது போஜனம் உண்ணாமல் படுத்தாலும் இடதுபுறமாய் ஒஞ்சரித்துப் படுங்கள். இதை ஒவ்வொருவரும் அனுசரித்து நடக்கவேண்டிய விஷயமென்று அறியக்கடவீர்களாக

கிழக்குத் திசையில் தலைவைத்து நித்திரைகொள்ள வேண்டும். பூமியில் மின்சார சக்தி கிழக்கிலிருந்து மேற்கு நோக்கிச் செல்கிறது. இதனால் கிழக்குத் திசையில் தலை வைத்துப் படுக்க வேண்டும். இப்படிப் படுத்தால் மின் சக்தி தலையில் ஆரம்பித்து கால்களின் வழியாக வெளியேறுகிறது. இது உடலுக்கு நன்மை தருகின்றது. மாறாக வேறு திசைகளில் தலைவைத்துப் படுத்தால் உடல் கோளாறுகள் ஏற்படுவதாக வைத்திய சாஸ்திரம் கூறுகிறது.

## இந்துமதம் ஒலிக் . . .

(3ம் பக்க தொடர்ச்சி)

மனமும் உடம்பும் நாம் ஓட்டும் மோட்டார் வண்டியைப் போல. நம் இஷ்டத்துக்கு அவை ஓடவேண்டுமேயொழிய, அவை எடுத்துக்கொண்டு போகிற இடத்துக்கு நாம் போகமுடியாது. 'ஆட்டோமொபைல்' என்றுதான் காருக்குப் பெயர். ஆனால் அதன் இஷ்டத்துக்குப் போக அதை விடுகிறோமா? ஸ்டியரிங்கும், பிரேக்கும் நம் வசம் இருக்க வேண்டும். மனம், உடல் இவற்றின் இஷ்டத்தை பூர்த்தி செய்வதிலும் இதே கொள்கைதான் இருக்க வேண்டும். இதை சாதிப்பது தன்னடக்கம்தான்.

இந்து மதம் மனத்தை அடக்கத்தான் சொல்கிறது நசுக்கச் சொல்லவில்லை.

தன்னடக்கத்தை வளர்க்க இந்துமதத்தில் எத்தனையோ வழிமுறைகள் சொல்லப்பட்டுள்ளன. விரதங்கள், அனுஷ்டானங்கள் இதற்காகவே ஏற்பட்டுள்ளன. உடம்பும், மனமும் தன்னடக்கத்துடன் செயல்பட்டால் பொறுமை தியாகம் முதலான குணங்கள் தானாகவே வரும். அடுத்ததாக அடைய வேண்டிய மேலான குணம் பற்றில்லாமை.

எதிலிருந்து விடுதலை? எதில் பற்றில்லாமலிருத்தல்?

அழிகின்ற பொருளின்மீது, நம் உடம்பின்மீது, ஏன் நம் வலுவான அபிப்பிராயங்கள் மீதுகூட பற்று இருக்கக்கூடாது. 'நான்' -'என்' என்கிற அகங்காரம் நீங்கினால் அபிப்பிராயங்களின் மீதிருக்கின்ற பற்று போய்விடும். பற்றறுத்தல் மிகமிக அவசியமான ஒரு குணம். பற்றற்ற நிலை ஆத்மஞானத்துக்கு வழிகோலுமா? இல்லை. பரம்பொருளை அடைய முயற்சித்தால் பற்று விலகுமா? இங்கும் திருவள்ளுவர் ஒரு புதுவழி சொல்கிறார்.

'பற்றுக பற்றற்றான் பற்றினை அப்பற்றைப்
பற்றுக பற்று விடற்கு.'

பற்றில்லாத பரமனுடைய அடியை அடையும்பற்று ஏற்பட்டால் மற்ற பற்றுகள் தானே அகலும்.

அடுத்த நற்குணம் உண்மை. வாயால் நிஜம் சொல்வது மட்டும் உண்மை என்று குறுகிய பொருள் கொள்ளக்கூடாது. எல்லா நற்குணங்களிலும் இது மேலான குணம். இதன் அடிப்படையில்தான் எல்லா தர்மங்களும் (கடமைகளும்) நடைபெறும்.

இந்த ஐந்து குணங்களை அடைய முயற்சி செய்தால் ஆத்மஞானம் தானாகவே வந்துவிடும். தனி மனிதனும் முன்னேறுவான். சமுதாயமும் சண்டை சச்சரவின்றி முன்னேறும்.

ஆத்மஞானம் பெற விரும்புகிறவர்கள் ஐந்து நல்ல குணங்களை மாத்திரம் அடைய முயற்சி செய்தால் மட்டும் போதாது. காமம், குரோதம், லோபம், மோகம், மதம், மாச்சர்யம் ஆகிய ஆறு தீய குணங்களை தவிர்க்க வேண்டும்.

காமம் என்பது வேட்கை, அவா. குரோதம் என்பது கோபம். லோபம் என்பது பேராசை. மோகம் என்பது மையல், வெறி. மதம் என்பது கர்வம். மாச்சர்யம் என்பது பொறாமை அழுக்காறு. நற்குணங்களை தன்னில்பெருக்கிக்கொண்டு, பாவங்களிலிருந்து தன்னை விடுவித்துக் கொள்கிறவனை தர்மாத்மா என்று சொல்லுவார்கள்.

# கீதா உபதேசம்

ஒரு குடும்பத்திற்கு இவ்வளவு சர்க்கரை, இவ்வளவு அரிசி, இவ்வளவு எண்ணெய் என்று நபர்களின் எண்ணிக்கைக்கு ஏற்றவாறு 'ரேஷன் கார்டு'களில் உணவுப் பண்டங்கள் விநியோகிக்கப்படுகின்றன. அந்தக் கார்டை எடுத்துக்கொண்டு 'ரேஷன்' கடைக்குச் சென்று கார்டில் கொடுக்கப்பட்ட அளவுதான் வாங்க முடியும். பணம் போதவில்லையானால் குறைத்து வாங்கிக்கொள்ளலாம். ஆனால் பணம் இருக்கிறதே என்று அதிகமாக வாங்கிக்கொள்ள முடியாது. அதுபோல், 'வரிசை எண்படிதான் கொடுப்பேன். பிறகு வாருங்கள்!' என்று கடைக்காரர் விரட்டிவிட முடியாது. கேட்டதை, கொடுக்கவேண்டியதை கொடுக்கக்கூடியதை கொடுத்தே தீரவேண்டும். முடியாது என்று சொல்லமுடியாது.

அப்படிதான் ஒவ்வொரு மனிதனும் 'விதி' என்னும் கார்டுடன் உலகத்திற்குள் வருகிறான்: முற்பிறவியின் பலாபலன்கள் என்று பிறவியை வரிசைப்படுத்துவதில்லை. அவனது அனுபவங்களை அவனது மனப்போக்கிற்கு ஏற்ப பாகுபடுத்திக்கொள்கிறான். சிலர் தேவைக்கு மீறி செய்ய முற்பட்டு தோல்வியுறுகிறார்கள். சிலவற்றை தேவையில்லை என்று குறைத்துக்கொள்கிறான். சிலநேரத்தில் ஒன்றுமே வேண்டாமென்று துறவுகொள்கிறான். அட்டவணையில் உள்ளபடி அளக்கப்பட்டாலும், மனிதனின் அடிப்படை எண்ணங்கள் அட்டவணையை மாற்றி அமைக்கிறது.

'கடவுள் என்னை ஏன் தண்டிக்கிறார்!' என்று கடவுளை நிந்திப்பதில் அர்த்தமில்லை. முன்னால் செய்த காரியத்தின் தொடர்தான் இன்று நடக்கும் விஷயங்களும். இன்று விதைத்த விதை நாளையே மரமாகிவிடுவதில்லையே? அதுபோல், என்றோ நாம் செய்த காரியத்தின் விளைவுதான் இன்று நடக்கும் விஷயங்களாகும். இதில் உடனுக்குடனே (பிரத்யட்சமாக) கண்ணுக்கு எதிரில் நடக்கக்கூடிய விஷயம். மழை பெய்வதற்காக 'வருணஜபம்' யாகம் செய்வதாகும். சிறிது தூற்றலாவது தூறாமல் போகாது.

ஜபங்கள், சுலோகங்கள், மந்திரங்கள் இவையாவும் அதிக சக்தி வாய்ந்தவை. அவை ஆகாயத்தில் சதா சஞ்சரித்துக் கொண்டிருக்கின்றன. 'ஆகாயம் என்றால் மேலே கைகாட்டுவதுதான் வழக்கம். ஆனால் 'ஆகாயம்' என்றால் எங்கும் பரவியிருப்பது என்ற பொருளாகும். 'பரவெளி' என்பதுதான் ஆகாயம்! மனிதன் தோன்றிய காலந்தொட்டு ஆகாயத்தில் சப்தங்கள் இருக்கின்றன. அதனை மனிதன் தியானசக்தியால் காதால் கிரகித்துக்கொண்டு வாயால் தன்னைச் சுற்றியுள்ளவர்களுக்குச் சொல்லி வந்தான். இப்படித்தான் வேதம் பிறந்தது. பனியில் நடந்து போகிறோம். சிறிதுநேரத்தில் தலை ஈரமாக இருக்கிறது. காதுக்குள் ஈரம் இருக்கிறது. நாம் தண்ணீருக்குள் நனையவில்லையே? எப்படி ஈரமாகியது பனிமூட்டத்தில் நீர்த்திவலைகள் இருப்பதை அறிவோம். அதுபோலவே ஒலியலைகள் பிரபஞ்சமெங்கும் பரவியுள்ளது. வேதங்கள் யாவும் சத்தியமான வார்த்தைகள்.

தாத்தா, சித்தப்பா, குரு என்று உறவினர்கள் எல்லோரும் இறந்துவிடுவார்களே! என்று பாசத்தால் கட்டுண்டு போர்புரியாமல் இருந்தால் அதன் விளைவுகள் விபரீதமாகத்தான் முடியுமேதவிர, அனுகூலம் ஏற்படாது. யுத்தகளத்திற்கு வந்தவுடன் பேதலிக்க கூடாது. அதர்மத்தை அழித்து தர்மத்தை நிலைநாட்டவேண்டும். என்ற குறிக்கோளுடன் போரைத் துவங்குவெற்றி தானாகக் கிட்டும்' என்று பார்த்தனுக்கு கண்ணன் உபதேசம் செய்கிறார். தாமரையிலைத் தண்ணீர் உறவு மனப்பான்மை நம்மை பந்தம் என்ற சுழலிலிருந்து விடுவிக்கும்.

**ஜகத்குரு ஸ்ரீ ஜயேந்திர ஸரஸ்வதி சுவாமிகள்**

---

(8ம் பக்க தொடர்ச்சி)

## பட்டினத்தடிகளின் . . .

சம் ஆகியன ஒழுகும் மூக்கு குமிழம் பூவாகும். கண்ணீரும் பீளையும் வெளிப்படும் கண்கள் குவளை மலராகும். உள்ளே குறும்பி சேரும் காது வள்ளத்தண்டாகும். எண்ணெய் தடவிச் சீவாவிட்டால் ஈரும் பேனும் தோன்றி நாற்றமெடுக்கும் கூந்தல் கருமேகக் கூட்டமாகும். இவ்வாறு புகழ்ந்து கூறுவதெல்லாம் தம் காமப்பசியைத் தீர்த்துக்கொள்வதற்காகத்தான். இப்படி அறிவிழந்தவர்கள் பிறவித் துன்பத்தைப் போக்கும் பேரருளாளனுக்கு இரண்டு பச்சிலையைத் தூவித் துதித்தாலே போதும். அவனருளால் மேன்மையடைவார்கள் என்று உபதேசம் செய்கிறார்.

நெரூர் ஸ்ரீ சதாசிவ பிரும்மேந்திர ஞானிகள் ஆசையைப்பற்றிக் குறிப்பிடும்போது, நீர்க்குமிழி போன்றது வாழ்க்கை. நல்லது கெட்டது ஆகிய செயல்களின் இருப்பிடம் வாழ்வே மாயம். வாழ்வில் ஏற்படும் ஏற்றத் தாழ்வுகள் சுக துக்கங்கள் யாவும் பொம்மலாட்டம். இந்த உடல் பசி பசி என்று சோற்றுக்காகத் துடிக்கும். சோறு இறங்கியதும் காம விகாரத்தால் கூத்தாடும். ஆசையின் தளமே மனம். மிக உயர்ந்த நிலையில் வாழவேண்டும். வாழ்க்கை அமையவேண்டும். உயர்ந்த என்ற நிலையில் வாழ்வு அமைந்தவுடன் இன்ப நுகர்ச்சிக்கு காரணமான அத்தியாவசியங்களுடன் கூட நமக்கு பற்றோ அல்லது நம்மையோ பற்றிவிடுகின்றது. அதனால் துன்பம் ஏற்படுகிறது. அங்கே துன்பத்திற்கு காரணம் ஆசையே. சிந்தனையென்பது ஆசையல்ல. சிந்தனையில் செயல் என்ற கருவே உருவாகின்றது. ஆசைப்படும்போது செயலற்ற தன்மை என்பது சூன்யம் என்ற வெற்றிடமாக விரிவடைகிறது. சூன்யம் என்ற வெளியில் எவ்வளவோ இருக்கலாம். எல்லா மனிதர்களும் ஆசையை ஒழித்து ஈசனை வணங்கி பிறவாவரம் பெறவேண்டும். பிறவித் துன்பத்தை போக்க வேண்டும்.

# பசுமை வாராதோ பச்சிலையாளுக்கு?

பச்சை மலைதனில் பனிவிழும் வேளை
பரிதவித் தேறும் பாங்குடையாளே
உச்சி வெயி லுன்னை உரித்தெடுத்தாலும்
உணர்ச்சியி லென்றும் ஊமைதானோ ?

பாகாய் உருகுமுந்தன் பைந்தமி ழுதிரத்தால்
பாரெலாம் பசுமை காணுதடி
அகரத்திலு மறிவிலியாக இருந்ததனாலே தானோ
அகிலமு முன்னை ஆட்டுவிக்கின்றதோ ?

பண்பின் பாசறையே பாசத்தின் உறைவிடமே
பசுமையுனை பாங்குடன்தான் பாராதோ
நித்தில முன்னை நிமிர்ந்தொருமுறை நோக்காதோ
நிலமக ளுன்னையுமோர் உணர்வுடனே ?"

கற்றவருலகும் கல்லாவதேனோ கன்னியுன் வாழ்விலே
கதறியழுதாலும் விடைபகன்றிடுமா விவ்வுலகு
நற்குடிபெண்ணே நாலெழுத்தை நீ யறிந்தாலன்றி
நன்றியிலா விவ்வுலகுனை நசுக்கியேவிடும் !

— நா. ஹரிதாஸ் —

# உள்ளுவ ...

(4ம் பக்க தொடர்ச்சி)

## சிந்திக்க பயிற்சி பெறலாம்

மனதின் தன்மையை நன்கு அனுபவப்பட்டோர் கழுகுக்கு ஒப்பிடுகின்றனர். கழுகானது வானத்திலே ஆயிரம் அடி, இரண்டாயிரம் அடி என்று உயர உயரப் பறந்தாலும் அதன் பார்வை முழுக்கப் பூமியிலேயே பதிந்திருக்கும். அதுவும் எதற்கு? என்ன பிரேதம் எங்கேயாவது அழுகி நாறிக்கிடக்கின்றதா? அதை நாம் எப்போது உண்ணுவோம் என்று தருணம் பார்த்திருக்கும். அது மாதிரித்தான் உயர உயரப் படித்தாலும், மனதின் தன்மை குறைந்த தரத்திலேயே சிந்திக்குமானால் அதனாலாகும் பயன் ஒன்றுமில்லை. படிப்பின் பயனாக உயர உயரச் சிந்திக்க மனிதன் தன்னைப் பழக்கப்படுத்திக்கொள்ள வேண்டும். உயர்வானதையே சிந்தித்துப் பழகிக் கொண்டு வரும்போது முடிவிலே உயர்வான ஒரே வஸ்துவைச் (பொருளை) சிந்திக்கப் பயிற்சி பெறலாம். அதைத்தான் வள்ளுவரும் குறிப்பிட்டார்.

''கற்றதனாலாய பயனென்கொல் வாலறிவன்
நற்றாள் தொழா ரெனின்'' என்று.

உயர்வான பொருள் என்று குறிப்பிடும்போது எது தோற்றமில்லாததோ, எது மாற்றமில்லாததோ எதற்கு அழிவில்லையோ, ஆனால் எது நினைத்தால் தோற்றம், மாற்றம், அழிவு எல்லாவற்றையும் ஒரு நொடியில் உண்டாக்க முடியுமோ, அதையே கருத்திற்கொள்வோம். ஒவ்வொருவரும் அதனை ஒவ்வொரு பெயரிட்டு அழைப்பர். சக்தி என்பர் சாக்தர், விஷ்ணு என்பர் வைஷ்ணவர், பிரமம் என்பர் வேதாந்திகள், சிவம் என்பர் சைவர். எப்பெயரால் அழைக்கப்பட்டபோதும் 'ஏகம் ஸத்' தான். அதாவது உண்மைப் பொருள் ஒன்றே. உயர்ந்த பொருள் ஒன்றே.

## அபயக் குரல்

சைவர்கள் அந்தக்கேழில் விழுப்பொருளைச் சிவம் என்கின்றனர். கருவாய்க் கிடந்தும் அக்கழலினைகளையே கருத்திற்கொண்டவர்கள் ஞானிகள். அவர்கள் சிவனடியே சிந்திக்கும் திருப்பெருகு சிவஞானம் பெற்றவர்கள். இத்தன்மையை அடைதல் எளிதென்று நினைத்துவிடவேண்டாம். ஒரு கிளியைப் பிடித்துக் கூண்டிலே வைத்து வளர்த்து அதற்கு எவ்வளவுதான் இறைவன் நாமங்களையும், தேவார திருவாசகங்களையும் பழக்கப்படுத்தி வைத்திருந்தாலும் பூனையொன்று அதைப் பிடிக்க வரும்போது அது 'கீச் கீச்' என்று அபயக் குரல் எழுப்புமேயல்லாமல் தேவாரம் பாடாது. இறை நாமத்தை உச்சரிக்கவும் செய்யாது. அதுபோல்தான் நாமும் நம்மனதை நன்றாகப் பழக்கப்படுத்தி வைத்திருந்தாலொழிய, எமக்குத் தேவையான நேரம் உயர்பொருளைச் சிந்திக்க முடியாது.

## அபாயம் ஒருநாளுமில்லை

இப்போது என்ன அவசரம்? வயது போய்ச் சாகும் நேரம் இறைவனை நினைத்தால் போதுமென்று வாளாவிருந்தோமேயானால் பூனையைக் கண்ட கிளி கீச்சிட்ட கதையாகவே முடியும். ஏனென்றால் எதை எண்ணி அதிகம் பழகியுள்ளதோ அதையேதான் எமது மனது புலனைந்தும் பொறி கலங்கி அறிவழியும்போதும் எண்ணும். அதனால்தான் மிகப்பெரிய ஞானியும் 'ஐயும் தொடர்ந்து விழியும் சொருகி அறிவழியும்போது கையும் தொழப்பண்ணி ஐந்தெழுத்தோதவும் கற்பியுமே' என்று இறைவனை வேண்டுகின்றார். ஆனால் கடைசி வேளையில் கடவுளருளைப் பெறப் பெரும் புண்ணியம் செய்திருக்க வேண்டும். ஆதலால் அப்போது சிவநாமத்தைச் சொல்ல எம்மால் முடியாமல் போய்விட்டாலும் இப்போதே சொல்லி வைப்போம்.

''சிவாய நமவென்று சிந்தித்திருப்போர்க்கு
அபாயம் ஒரு நாளும் இல்லை''.

*With Best Compliments*

*of*

V

A WELL WISHER

# அன்பளிப்பு

" பால்நினைந் தூட்டும் தாயினுஞ் சாலப்
பரிந்து நீராவியே னுடைய
ஊனினை யுருக்கி உள்ளொளி பெருக்கி
உவப்பிலா ஆனந்தமாய
தேனினைச் சொரிந்து புறம்புறந் திரிந்த
செல்வமே சிவபெருமானே
யானுனைத் தொடர்ந்து சிக்கெனப் பிடித்தேன்
எங்கெழுந்தருளுவ தினியே "

— மணிவாசகப் பெருமான்.

அத்தியாவசியமான, இன்றைய காலகட்டத்திற்கு ஏற்றத் தகுந்ததுமான முக்கிய கட்டுரைகளை வெளியிடும் இந்துசமய திங்கள் இதழான இந்து கலாசாரம் இதழுக்கு என் இதயபூர்வமான வாழ்த்துக்கள்.

- **அன்பன்**

*With Best Compliments*

*of*

# RENUKA INDUSTRIES

**IMPORTERS & EXPORTERS**

MANUFACTURERS IN ALL KINDS OF

ALUMINIUM WARES

**170 - 172 OLD MOOR STREET COLOMBO-12**

Telephone: **35579**


இப்பத்திரிகை கொழும்பு இந்துகலாசார மன்றத்திற்காக கொள்ளுப்பிட்டி, நெல்சன் ஒழுங்கை 39/23ம் இலக்க இல்லத்தில் வசிப்பவரும் இதன் ஆசிரியருமான திரு. ஏ. எம். துரைசாமி என்பவரால், கொழும்பு-13, ஜெம்பட்டா வீதி 149-பி ஒஸ்கா எண்டர்பிரைஸஸில் 20-8-1990ல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.